திருவள்ளுவர் ஆண்டு 2035

செந்தமிழ்

திங்கள் இதழ்

தொகுதி : 98 பகுதி : 8 ஆகஸ்ட் 2004

மதுரைத் தமிழ்ச் சங்கம் 14-09-1901 THE MADURAI TAMIL SANGAM

மதுரைத் தமிழ்ச்சங்க வெளியீடு

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை - 1.

ஆகஸ்டு—

தமிழ்ச் சங்க ஆட்சிக் குழு

முகவை மன்னர் திரு.நா. குமரன் சேதுபதி	தலைவர்
திருமதி. இராணி இலட்சுமி நாச்சியார்	துணைத்தலைவர்
திரு. இரா. அழகுமலை	செயலாளர்
திரு. மா. சங்கர பாண்டியன்	உறுப்பினர்
திரு. டாக்டர். ந. சேதுராமன்	உறுப்பினர்
திரு. எம்.பி.ஆர். மலையாண்டி என்ற அசோக்	உறுப்பினர்
திரு. ச. பரங்குன்றம்	உறுப்பினர்
திரு. வே. திருவரங்கராசன்	உறுப்பினர்
திரு. இரா.குருசாமி	உறுப்பினர்
திரு. க. முத்தையா பசும்பொன்	உறுப்பினர்
திரு. இரா. கண்ணன்	உறுப்பினர்
திரு. சோ. இராமகுரு	உறுப்பினர்

கல்லூரிக்குழு

டாக்டர்.திரு.ந.சேதுராமன், M.S.,MCh.,(URO).,M.N.M.S.(URO).,FICS.,	தலைவர்
திரு. மா.சங்கரபாண்டியன்,பி.ஏ., பி.எல்	செயலாளர்
திரு. இரா.அழகுமலை, எம்.ஏ.,எம்.ஃபில்.,	உறுப்பினர்
திருமதி. ராணி இலட்சுமி நாச்சியார்	உறுப்பினர்
திரு. எம்.பி.ஆர்.மலையாண்டி (எ) அசோக், பி.எல்.,	உறுப்பினர்
திரு. எஸ்.பரங்குன்றம், பி.ஏ.	உறுப்பினர்
திரு. இரா.குருசாமி, பி.ஏ.,	உறுப்பினர்
திரு. சோ.இராமகுரு	உறுப்பினர்
திரு. க. முத்தையா பசும்பொன்	உறுப்பினர்
டாக்டர் திரு. நா.பாலுசாமி, எம்.ஏ.,பி.எல்.,எம்.லிட்.,பி.எச்டி.,	உறுப்பினர்
திருமதி. வாசுகி இராஜா, எம்.எஸ்.சி.,எம்.ஃபில்.,	உறுப்பினர்
டாக்டர்.திரு. க.சின்னப்பா, எம்.ஏ.,பி.எச்.டி., பல்கலைக்கழக உறுப்பினர்	உறுப்பினர்

செந்தமிழ்

தொகுதி : 98
பகுதி : 8
ஆகஸ்ட் 2004

(தோற்றம் 1903) திங்கள் இதழ்

திருவள்ளுவர் ஆண்டு 2035

வள்ளல் பாண்டித்துரைத்தேவர்
21.03.1867 - 02.1201911

மதுரைத் தமிழ்ச் சங்கம் 14-09-1901 THE MADURAI TAMIL SANGAM

இதழ் கட்டணம்	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக்கட்டணம்	ரூ. 60	ரூ. 600
புரவலர் கட்டணம்	ரூ. 1000	ரூ. 2000
தனி இதழ் கட்டணம்	ரூ. 6	

செயலர், ஆசிரியர் **இரா. அழகுமலை** எம்.ஏ.,எம்.ஃபில்.,

பதிப்பாசிரியர் **இரா. சதாசிவம்** எம்.ஏ.,எம்.ஃபில்.,

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை – 1.

பொருளடக்கம்

இதழ் மணம் 267

ஒளி சிந்தும் சிந்தாமணி 268

முனைவர் கு.வெ.பாலசுப்பிரமணியன்

தமிழ் இனிமைக் கோட்பாடு 277

முனைவர் அரசக்கண்ணன்

அனுபவங்களின் எதிரொலி இலக்கியம் 282

பேரா.சி.சுந்தரி

தமிழ் ஒரு செவ்வியன் மொழி 290

ஜி.ஜான் சாமுவேல்

தமிழும் மலையாளமும் 303

எஸ்.வையாபுரிப்பிள்ளை

இதழ் மணம்

தமிழ்ப் பல்கலைக்கழகப் பேராசிரியர் கு.வெ.பாலசுப்பிரமணியன் அவர்கள் எழுதிய "ஒளி சிந்தும் சிந்தாமணி" என்னும் கட்டுரை இவ்விதழிலும் அடுத்த இதழிலும் வெளிவருகிறது. சிந்தாமணியின் ஒளியை இல் நுழைகதிர் போல இனிய முறையில் நுட்பமாக உளம் கொள்ளத்தக்க வகையில் வரைந்துள்ளார்கள். ஆழ்ந்து அகன்ற கல்விப்புலம் கட்டுரை முழுவதும் செறிந்து பரந்து கிடப்பதைக் காணமுடிகிறது. மெய்ப் பொருட் செய்திகளையும், இலக்கியச் செழுமையையும் திருத்தக்க தேவரின் வழிநின்று கம்பன் முதலான மகாகவிகள் எடுத்தாண்டுள்ளதைப் பேராசிரியர் நயம்பட விளக்கியுள்ளது அரிய முயற்சியாகும். ஒரே கட்டுரையில் நூல் முழுவதையும் ஓவியமாகத் தீட்டியிருக்கும் முயற்சி வாழ்த்துக்கும் பாராட்டுக்கும் உரியதாகும்.

முனைவர் அரசக்கண்ணனார் "தமிழ் இனிமைக் கோட்பாடு" என்னும் கட்டுரையில் தமிழ் மொழியின் இனிமையையும் தனித் தன்மையையும் அறிஞர் பாதுகாத்துப் போற்றி வரும் வரலாற்றை சிந்தனைக்கு வைத்துள்ளார்.

முனைவர் சுந்தரி சிவக்கண்ணன் அவர்கள் இலக்கியமும் அனுபவங்களும் தறியில் ஊடும் பாவுமாக அமைந்திருப்பதை தமிழ்ச் சுவையுடன் படைத்துள்ளார்.

அறிஞர் ஜி.ஜான்சாமுவேல் அவர்கள் எழுதிய தமிழ் ஒரு செவ்வியன் மொழி என்னும் கட்டுரை தமிழின் செவ்வியல் கூறுகளை விளக்குவதோடு உரிமையோடு போற்ற வேண்டியவர்கள் பாராமுகமாக இருப்பதைச் சுட்டிக் காட்டி அறிஞர் அதன் அருமை பெருமைகளைக் காலங்காலமாகப் போற்றி வந்திருப் பதையும் விளக்கியுள்ளார். காலத்தின் கட்டாயம் கருதி தமிழ் உலகம் படிக்க வேண்டும் என்பதால் மீண்டும் வெளியிடுகிறோம். அமெரிக்காவில் நிறுவப்பட்டுள்ள உலகத் தமிழ் மொழி நிறுவனத்தாருக்கு நன்றி.

"நமக்கு நம்முடைய தமிழ் மொழியானது அபிவிருத்தியடைந்து ஆங்கிலம் போல தழைத்து ஓங்கல் வேண்டும் என்ற எண்ணம் இருக்குமானால் நாமெல்லாரும் அநேகம் பத்திரிக்கையை நடத்துதலையும் பத்திரிக்கைகளை நடத்தும் அமைப்புகளுக்கு நம்மாலியன்ற அளவு உதவி செய்தலையும் கைக்கோடல் வேண்டும்" என்று பரிதிமாற்கலைஞர் தமிழ் மக்களுக்கு நூறு ஆண்டுகளுக்கு முன்பு ஒரு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

செந்தமிழ் இதழுக்குச் சந்தா சேர்க்கும் பணியில் ஈடுபட வாசக அன்பர்களை வேண்டுகிறேன்.

ஒளி சிந்தும் சிந்தாமணி

முனைவர் கு.வெ.பாலசுப்பிரமணியன்,
மேனாள் சிறப்பு நிலைப் பேராசிரியர், தமிழ்ப்பல்கலைக்கழகம்

சீவக சிந்தாமணி ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்று விசயை சீவகன் பிறந்தவுடன் அவனைச் '**சிந்தாமணி**' என்று கூறிப் போற்றினாள்.

பிறந்த நீயும் பூம்பிண்டிப் பெருமானடிகள் பேரறமும்
புறந்தந்து என்பாற் றுயர்க்கடலை நீந்தும் புணை மற்று ஆகாக்காற்
சிறந்தார் உளரேல் உரையாயால் சிந்தாமணியே கிடத்தியால்
மறங்கூர் நுங்கோன் சொற்செய்தேன் மம்மர் நோயின் வருந்துகோ

என்பது விசயையின் உரை. விசயை மகனைச் சிந்தாமணி எனப் போற்றியது நூலுக்காயிற்று. நன்னூல் உரைகாரர் மயிலைநாதர் சிந்தாமணி என்பது தன்மையாற் பெற்ற பெயரென்பர். சமண நூல்களாகிய மகாபுராணம், ஸ்ரீபுராணம் ஆகியவற்றில் சீவகன் வரலாறு கூறப்பெறுகின்றது. வடமொழியில் ஷத்திரசூடாமணி, கத்தியசிந்தாமணி, ஜீவந்தர நாடகம், ஜீவந்தர சம்பு ஆகிய நூல்களும் சீவகன் கதையைக் கூறுகின்றன. எனினும் திருத்தக்கதேவர் இவற்றினின்றும் மாறுபட்டுச் சீவகன் கதையைக் கூறக் காண்கிறோம்.

சிந்தாமணியை இயற்றிய திருத்தக்கதேவர் சோழர் குலத்தில் தோன்றியவர் என்பார் நச்சினார்க்கினியர். 3143ஆம் பாட்டின் உரையில் நச்சினார்க்கினியர், இந்நூலின் செய்யுள் 2700 எனக்கூறுவர். ஆனால் இப்போது உள்ள பாடகள் 3145. எனவே 445 செய்யுட்கள் இடைச் செருகலாகக் கலந்துள்ளன என்பது அறியப்பெறும்.

கம்பர் இந்நூலிலிருந்து ஓரகப்பை முகர்ந்து கொண்டேன் என்று கூறினாரென்றும், அநபாய குலோத்துங்கன் சிந்தாமணியில் ஈடுபட்டிருந்த நிலையை மாற்றவே சேக்கிழார் பெரியபுராணத்தை இயற்றினாரென்றும் கதைகள் உள்ளன. சிற்றின்பச்சுவை வெளிப்படத் தம்மால் பாடமுடியும் என்று காட்டுதற்காகத் திருத்தக்க தேவர் புலவர்களிடையே கூறிய

சூளை மெய்ப்பிக்க இந்நூல் இயற்றினாரென்றும் கூறும்.

நூலாராய்ச்சி

1. முதனூல்: வடமொழியில் ஜீனசேனாச்சாரியாரும், குணபத்திரமுனிவரும் மகாபுராணத்தை இயற்றினர். இப்பெரும் புலவர்களுக்குப் பின்வந்தோரில் சிந்தாமணி ஆச்சார்யா என்று ஒருவர் குறிப்பிடப் பெறுகின்றார். இவர் தர்மார்த்த காமமோட்சங்களைக் குறிக்கும் சிந்தாமணியை வீடுகள் தோறும் பரவச் செய்த சிந்தாமணி முனி என்று புகழக் காண்கிறோம். இச்சிந்தாமணியும் இதனோடு ஸ்ரீவர்த்த தேவர் இயற்றத் தோன்றிய சூளாமணியும் சமண சமயத் தமிழ்க்காப்பியங்களாகும். சிந்தாமணி ஆசார்யர் என்பவரே திருத்தக்க தேவராவார். உரைச் சிறப்புப் பாயிரச் செய்யுள்

வையம் புகழ்ந்து மணிமுடி சூட்டிய
பொய்யில் வான்கதை பொதிந்த செந்தமிழ்ச்
சிந்தாமணியைத் தெண்கடல் மாநிலம்
வந்தாதரிப்ப வண்பெரு வஞ்சிப்
பொய்யா மொழிபுகழ் மையறு காட்சித்
திருத்தகு முனிவன் கருத்திது வென்னப்
பருப்பொருள் கடிந்து பொருள் தொடர்ப்படுத்து

என்று கூறக்காணலாம். திருத்தகு முனிவன் என்பது திருத்தக்க தேவரைக் குறிப்பது. சிந்தாமணி இயற்றியமையின் இவர் சிந்தாமணி ஆச்சார்யர் எனப்பெற்றிருக்க வேண்டும்.

சிந்தாமணியின் முதனூல்களாகக் கருதத்தக்கன வடமொழியில் வாதீபசிம்மன் இயற்றிய க்ஷத்ரசூடாமணியும் கத்ய சிந்தாமணியும் என வையாபுரிப்பிள்ளை கூறுகின்றார். சிந்தாமணியின் பல செய்யுட்கள் மேற்காட்டிய நூற்செய்யுட்களின் மொழி பெயர்ப்பாகத் திகழ்கின்றன என்றும் பிள்ளையவர்கள் கூறுவார்.

ஸ்ரீபுராணத்தில் இருபத்து நான்காம் தீர்த்தங்கரராகிய ஸ்ரீவர்த்தமான தேவர் புராணத்தில் சீவக சரித்திரம் கூறப்பெறுகின்றது. அவ் வரலாறு,

ஜம்புத்வீப பரத க்ஷேத்திர ஹேமாங்கத விஷய ராஜமகாபுரத்து ராஜா சத்தியந்தரன்; தேவி விஜயை என்பாள். இவன் மந்திரி காஷ்டாங்காரிகன்; புரோகிதன் ருத்திர தத்தன் என்பான். ராஜா விஜயாதேவியுடன் அனவரதம் போகாபிலாஷி ஆகையினால் மந்திரி பக்கலே ராஜ்ய காரிய நிர்வாகத்தினை நியோகித்து இஷ்ட விஷய காமபோகங்களை அனுபவித்துச் செல்லாநின்ற நாளகத்து ஒருநாள் விஜயை ஓர் அசோக விருட்சத்தினைப் பரசுவினாற் சேதிக்க வீழ்ந்தபின் அதன் மூலத்தே ஒரு பாலாசோகம் அஷ்ட மாலாலங்கிருதமாகித் தோற்றவும் சப்தம் கண்டு ராஜாவுக்கு சொப்னத்தை நிவேதிப்ப, ராஜாவும் சொல்லுவான்: எட்டுக் கல்யாணத்தை உடையனாகி எனக்குப் பின் சகல புவன ராஜ்ய யோக்யனாயினான் ஒரு புத்திரனைப் பெறுதி என்றனன்...

என்றவாறு தொடர்கிறது. முன் நூலினும் சமயக்கருத்தே அடிப்படை என்பது நன்கு புலனாவதை ஸ்ரீபுராணம் கொண்டு உணரலாம்.

மணநூல்

சீவகன் எட்டுப்பெண்களை மணந்து கொண்டமைபற்றி இந்நூல் மணநூல் எனவும் வழங்கும். காந்தருவதத்தை, குணமாலை, பதுமை கேமசரி, கனகமாலை, விமலை, சுரமஞ்சரி, இலக்கணை என்ற எட்டுப்பெண்களையும் மணந்த சீவகன் பின் நிலையாமை உணர்ந்து தவம் செய்து வீடுபெற்றான் எனச் சிந்தாமணி கூறுகின்றது. சீவகன் சிற்றின்பம் நுகர்ந்தவற்றை இந்நூல் பல பகுதிகளில் உரைக்கக் காணலாம். சீவகன் சுரமஞ்சரியோடு துய்த்த இன்பத்தைக் கூறுங்கால்,

> யாழ்கொன்ற கிளவியாள் தன் அமிழ்துறழ் புலவி நீக்கிக்
> காழின்றிக் கனிந்த காமக் கொழுங்கனி நுகர்ந்து காதல்
> தாழ்கின்ற தாம மார்பன் தையலோடு ஆடி விள்ளான்
> ஊழ்சென்ற மதியம் வெய்யோன் ஒட்டி ஒன்றாயது ஒத்தான்.

எனக் காமத்துக் காழில் கனியெனும் விதையில்லாக் காமப் பழத்தை (திருக்குறள் 1191) நுகர்ந்தவாறு கூறுகின்றனர். காமச்சுவையும் செயலும் நிரம்ப இலம்பகந்தோறும் தேவர்

எழுதிச் செல்வதற்குப் பலரும் ஒரு காரணம் கூறுவர். இது நிலையாதது என அறிவுறுத்தற்பொருட்டாகப் பின்னர் முத்தியிலம்பகத்தில் துறவு நெறியின் சிறப்பை ஆசிரியர் குறிப்பதால், மக்கள் பெரிதும் விரும்பும் இன்பத்துறை பற்றி மிகுதியும் கூறிப் பின்னர் அவர்தம் போக்கிற் செய்யுட் சுவை மாந்தித் திளைத்து நிற்கையில் இது நிலையற்றது காண் எனக் கற்பிப்பதோர் எடுத்துரை உத்தி என மொழிவர். வேறொரு சாரர் சிற்றின்பத்துட் சலிப்பு ஏற்படுமாறு மிகுதியும் மொழிந்தனர் என்பர். தேவர் இன்பநூலின் திறமெலாம் கூறினர் என்பது உண்மையாயினும், இத்துறை போலவே பிறபிற துறையெலாம் தம் விச்சைத்திறம் தோன்றக் கூறினர் என்பதை மறுத்தல் ஆகாது. அரசியல்நூல், யானைநூல், மணிநூல், நிலநூல், சோதிடநூல் ஆகிய பல்துறைகளில் பயின்ற நுட்பங்களைத் தேவர் இந்நூலில் வெளிப்படுத்துகின்றார். பதுமை என்பாள் பாம்பு தீண்டிக்கிடந்தபோது அவள்நிலையைக் கண்ட சீவகன்,

பொழிந்து நஞ்சு உகுத்தல், அச்சம், இரை, பெருவெகுளி, போகம்,
கழிந்து மீதாடல், காலம், பிழைப்பு என எட்டினாகும்

என்று எட்டுக் காரணங்களாற் பாம்பு ஒருவரைக் கடிக்கக்கூடும் என்கிறான். பாம்பின் கடிவாய்த்தடம் கண்டு நால்வகைப் பற்களில் எப்பல் நஞ்சுறக் கடிப்பது என்றும் கூறக் காணலாம்.

நீலமணியின் தன்மையைப் பாலின் துணையால் ஆராய்தல் (1325)
போரில் வீரர்கள் மேற்கொள்ளும் ஐவகை நெறிகள் (1676)
பூமாலையின் தூய்மையை அன்னப்பறவை. சகக்ரவாகப்புள் கொண்டு சோதித்தல் (1893)
தண்ணீர், சோறு ஆகியவற்றின் தூய்மையைக் கருங்குரங்கு கொண்டு ஆய்தல் (1893)
பதினைந்து வயதில் ஆடவர்க்குத் தோன்றும் நான்கு குணங்கள் (411)
இருவினை கழியப் பின்பற்ற வேண்டிய மூன்று ஒழுக்கம் (1436)
யாழிசைக்கும் போது தோன்றக்கூடாத மெய்ப்பாடுகள் (658)

எனப் பல்வேறுபட்ட துறை இலக்கணங்களையும் நுட்பங்களையும் இந்நூல் பேசுகின்றது. இவற்றிலெல்லாம் தேவர்

பயிற்சியும் பட்டறிவும் உடையவர் என எண்ணுதல் பிழையாம். பல்வேறு துறைகளைப் பற்றிய கல்வியறிவு பெற்றவர் அவர் எனல் வேண்டும். இவ்வாறே சிற்றின்பத் துறை நுட்பமெல்லாம் அனுபவியாதே அறிந்தவர் என்பது பொருந்தும். நிலையாமையின் நிலை கூறித் துறவின் உயர்வு கூறுவதற்குச் சிற்றின்ப இழிவு கூறியாக வேண்டும். அச்சிற்றின்ப நுட்பமெல்லாம் அறிந்தே தெளிதல் வேண்டுமென்பதில்லை. காட்சியளவையான் உலகர் அதில் மாந்தி எய்தும் துயரெலாம் கண்ட அறிவன் அது தொடர்பான பலவற்றையும் அறிந்து நூல் செய்தான் என்பதே பொருந்துவதாம். இச்சிற்றின்பத் துறைகளில் தோயும் தலைவன் தலைவியர் நிலையைப் பாடும் தேவரின் வருணனையில் ஏனைப் பகுதிகளைப் பாடும்போது காணப்பெறும் புலமைத் துளிர்களும், கற்பனைக் கிளைகளும், புதுக் கருத்தியல்களும், குறிப்பு மொழிகளும் புலப்பட்டில. இவற்றைப் பாடியன்றித் தம் முழு நோக்கமான வாழ்க்கை வெறுப்பைச் சித்திரிக்க இயலாதென்ற மனப்போக்கு ஆங்குப் புலனாகின்றது.

மைந்தருட் காம னன்னான் மகளிருள் திரு வனாளை
அந்தரத் தமரர் பெற்ற அமிர்தெனப் பருகினானே. (839)

வாளார் மணிப்பூணவன் மாதரம் பாவைதன்னை
நாளாற் பெற்ற நல்லமிர் தென்ன நயந்தான் (1074)

ஆய்ந்தவன் தோளிணை நாகமாக வைத்து
ஈந்தது அக்கடல் அவற்கு அமுதம் என்பவே (1492)

வேய்வெறுத் தமைந்த தோளாள் விழுத்திரை அமுதமென்று
சேய்நலம் கடந்த செல்வன் திருநலம் தெளித்திட்டாற்ற (1692)

அங்கலுழ் மேனியாய் நின் அணிநலம் அமிழ்த மென்றான் (1988)

என்றவாறு வானவர் நாட்டு அமுதமொத்தது காமக்கனி இன்பமெனப் பல இலம்பகங்களிலும் மீளமீளச் சொல்லுதல் எண்ணத்தகும். மானிடர் காதலின்பத்தை வருணிக்குங்கால் அமுதமுண்டார் எனச் சொல்வது மரபு மொழியாமேயன்றிப் புதுப்புலமை மொழியாமா? தாம் தேவர் என்பது பற்றி அமுதம்

எனக் கூறினாரோ? அன்று வேறுவகையாகப் பலபட வருணிக்கத்தேவர் உணர்ச்சியும் கற்பனையும் இத்துறைக்கண் ஆர்வம் காட்டவில்லை என்பது தெளிவு. பதுமையைப் பாம்பு தீண்டிற்று என்றவுடன், சீவகன் விரைந்து மருத்துவம் மேற்கொளாது தன் பாம்புநூல் அறிவை விரித்துரைப்பது உலகியல்பின் விலகியது என்பது தெளிவு. வாழ்க்கை நிலையாமையைப் பாடும்போது தேவர்க்கு உவமை உருவக அணிகள் பெருகத்தோன்றுகின்றன.

பேதைமை என்னும் வித்திற் பிறந்துபின் வினைகள் என்னும்
வேதனை மரங்கள் நாறி வேட்கைவேர் வீழ்த்து முற்றிக்
காதலும் களிப்பும் என்னும் கவடுவிட்டு அவலம் பூத்து
மாதுயர் இடும்பை காய்த்து மரணமே கனிந்து நிற்கும்

எல்லாத் தீவினைகளுக்கும் அறியாமையே வினை என்றார். வேதனை மரங்கள் தோன்ற அடிப்படை வேட்கை வேரென்றார். வேதனை மரங்களிற் கிளை களாகத் தோன்றுவன காதலும் களிப்பும். அவலம்பூ; இடும்பை காய்;மரணம் கனி என்கிறார். வேட்கையை வேராக உருவகித்தமையின், அதனை அகற்றுக என்றார்.

வாழ்க்கை விழித்திமைப்பதற்குள் மறைவது போன்றது. வண்டுகள் பறந்து சென்ற வழியும், மீன்கள் நீந்திச் சென்ற வழியும் போல விழித்திமைப்பவர்க்குத் தெரியாமல் தொலைந்து போவது எனத் தேவர் வாழ்க்கையின் விரைந்த செலவைக் கூறுகின்றார்.

தேவரின் கருத்து சமணசமயக் கொள்கைகளை வலியுறுத்தச் சீவகன் கதையை ஓர் ஊடகமாகக் கொள்ளுதலே. அவர்போலக் காப்பியக்கதை வழியே சமணக் கொள்கைகளை விரித்தாரிலர். சிந்தாமணி ஒரு சமய சாத்திரக்கிடங்கு. அதனுள் பொதுளும் சில சமய விளக்கங்கள் இங்கு ஆராய்தற்குரியன.

சமண உலகில் இரத்தினத் திரயம் எனப் போற்றப்பெறுவன நன்ஞானம், நற்காட்சி, நல்லொழுக்கம் என்னும் மூன்றுமாகும். இவற்றை நீலகேசி திரியோக மருந்து என்று கூறும். இவற்றின் விளக்கத்தைச் சித்திர கூடத்தில் உறைகின்ற சமண முனிவர்க்குச் சீவகன் தெளிவுபடுத்துகின்ற வகையிற் கூறுகின்றான்.

மெய்வகை தெரிதல் ஞானம்; விளங்கிய பொருள்கள் தம்மைப்
பொய்வகை இன்றித் தேறல் காட்சி; ஐம்பொறியும் வாட்டி
உய்வகை உயிரைத் தேயாது ஒழுகுதல் ஒழுக்கம்; மூன்றும்
இவ்வகை நிறைந்த போழ்தே இருவினை கழியும் என்றான்.

இவற்றுள் ஞானமாவது பொருள்களின் இயல்பை உள்ளவாறே உணர்தலாம். இதனைத் திருவள்ளுவர் மெய்ப்பொருள் காண்பதறிவு. பொருள் நின்ற பெற்றியைப் பொய்யின் றுணர்தல் மருளறு நன்ஞான மாண்பு என அருங்காலச் செப்புக் கூறும். பொருள்களை அவற்றின் தோற்றத்தால் அறிவது வெற்றறிவு. பொருள்களின் உண்மை இயல்பைக் கண்டு கொள்ளும் ஞானம் சிலர்க்கே வாய்க்கும். அடுத்து நற்காட்சி என்பது ஐயமின்மை, அவாவின்மை, உவர்ப்பின்மை, மயக்கமின்மை, அறப்பழி நீங்கல், அழிந்தாரைத் தாங்குதல், அறத்துக்கு அளவளவு, அறத்தை விளக்குதல் என்றும் எட்டுறுப்புப் பெற்றது. நல்லொழுக்கம் என்பது இல்லறத்தார்க்குரிய அணுவிரதமும், துறவறத்தார்க்குரிய மகாவிரதமும் ஆகும். இவற்றுள் அணுவிரதம் என்பது, கொல்லாமை, பொய்யாமை, திருடாமை பிறன் மனைவிழையாமை, தேவையான அளவே பொருள் ஈட்டுதல், கள் உண்ணாமை, ஊன் உண்ணாமை, தேன் உண்ணாமை, இரவில் உண்ணாமை, பெரியோரைப் பணிதல் ஆகிய பத்துமாம், மகாவிரதமாவது கொல்லாமை, வாய்மை, திருடாமை, துறவு, அவாவறுத்தல் ஆகிய ஐந்துமாம்.

சமண சமய அடிப்படை நெறிகளான மேற்கூறியவற்றின் சிறப்புகளைப் புலப்படுத்துவதே சிந்தாமணியின் நோக்கமாகும். இவை எவ்வாறு நூலில் விளக்கமுறுகின்றன எனக் காணலாம். சீவகன் எண்மரை மணந்து மக்களைப் பெற்று உலக இன்பமெலாம் நுகர்ந்து வாழுங்கால் ஒருநாள் சோலையில், ஒரு மந்தியையும் கடுவனையும் கண்ணுற்றான். மந்தி கடுவனின் தீயொழுக்கம் கண்டு வாடியது. கடுவன் ஊடல் தீர்க்க ஒரு பலாப்பழத்தைப் பகுத்து அதன் சுளைகளை மந்திக்குக் கொடுத்தது. மந்தி ஊடல் நீங்கிச் சுளைகளை உண்ணப்புகுங்கால், சோலையைக் காவல் செய்வான் மந்தியையும் கடுவனையும் விரட்டிவிட்டுச் சுளைகளை உண்ணுவானாயினான். இதுகண்டு

சீவகன் உலகவாழ்க்கை இத்தகைத்தே என எண்ணினான். கைப்பழம் இழந்த மந்தி கட்டியங்காரனை ஒத்தது; பழத்தைப் பெற்ற சோலைக்காவலன் என்னை ஒத்தனன். வலியவர் பிறரிடமிருந்து செல்வத்தைக் கவர்வதே உலகியலாயிற்று எனத்தான் பெற்ற செல்வத்தை வெறுத்துத் துறவு மேற்கொண்டனன். இதுவே நன்ஞானமாகும். உலகியல் காட்சி ஒன்று. புறக்காட்சிகள் உள்ளீடாக ஒரு குறிப்புணர்த்த அதனை உணரும் அறிவே ஞானமாகும்.

நற்காட்சி என்பது சம்மியக் தரிசனம் எனப்படுவது. ஐயம், அவா, உவர்ப்பு, மயக்கம் ஆகியன இல்லாமல் ஒன்றைக் கருதுவது இக்காட்சிக்குரியதாகும்.

விலங்குவில் உமிழும் பூணான் விழுச்சிறைப் பட்ட போழ்தும்
அலங்கலந் தாரினான் வந்து அருஞ்சிறை விடுத்த போழ்தும்
புலம்பலும் மகிழ்வும் நெஞ்சிற் பொலிதலும் இன்றிப் பொன்னார்ந்து
உலங்கலந்து உயர்ந்த தோளான் ஊழ்வினை என்று விட்டான்.

எனப்பதுமையார் இலம்பகத்தில் (1167) சீவகன் நிலை குறித்துத் தேவர் கூறுவது நம் சிந்தனைக்குரியது. கட்டியங்காரன் தன்னைச் சிறையில் அடைத்ததையும், சுதஞ்சணன் தன்னை விடுவித்ததனையும் குறித்துச் சீவகன் துயரோ மகிழ்ச்சியோ எய்தவில்லை. அவன் மனம் நிகழ்வுகளால் பாதிக்கப்படாத ஒரு சமனிலைக்கு வந்துவிட்டது. தவஞானிகளுக்குரிய இச்சால்பு வீரர்களுக்கு அமைந்ததாகப் பாடுவது சங்க இலக்கியத்திலேயே இடம் பெற்றிருப்பினும் (புறம் 77) காப்பியத் தலைவனுக்குரியதாகக் கற்பித்துக் கூறலைச் சிந்தாமணியில் தெளிவுபடக் காண்கிறோம். குண்டலகேசியில்.

வேரிக் கமழ்தார் அரசன் விடுகென்ற போழ்தும்
தாரித்த லாகா வகையாற் கொலை சூழ்ந்த பின்னும்
பூரித்தல் வாடல் இவற்றாற் பொலிவின்றி நின்றான்
பாரித்த வெல்லாம் வினையின் பயனென்ன வல்லான்.

என்று கூறக்காணலாம். இந்தக் காட்சி ஊழின் நம்பிக்கையில் தோன்றுவதாக இந்நூல்கள் கூறுகின்றன. கம்பர் இராமனிடம் இப்பண்பு காணப்பட்டதெனக் கூறக் காணலாம்.

நல்லொழுக்கம் என்பது காட்சியாகிய நிலையில் ஞானமாகிய கதவைச் சேர்த்த நிலையில் அக்கதவில் அமைந்த உறுதியான தாழ் என்பர். சீவகனுக்கு இளையவனாகிய நந்தட்டன் காந்தருவதத்தையைக் காண்கின்றான். தத்தை சீவகன் பிரிவால் துயருற்றுக் கிடக்கின்றாள். அப்போது அவளுடைய கோலம் எவ்வாறு இருந்தது? நந்தட்டன் அக்கோலத்தைக் கண்ணுற்றானா? இவ்வினாக்களுக்குத் தேவர் கூறுகின்றார்:

திங்கள் வாள்முகமும் நோக்கான் திருமுலைத் தடமும் நோக்கான்
அங்கதிர்க் கலாப மின்னும் அணியல்குற் பரப்பும் நோக்கான்
செங்கயற் கண்ணினாள்தன் சீறடிச் சிலம்பு நோக்கி
எங்குளார் அடிகள் என்னா இன்னணம் இயம்பினானே (1705)

சீவகனைப் பிரிந்த நிலையில் தத்தை இவ்வாறிருந்தாள் என்று கூறுவது பொருந்தாது, அது தேவர் கருத்தாகவும் இராது என்றுணர்ந்த நச்சினார்க்கினியர்

"கயற்கண்ணினாளுடைய, முன்பு திங்களை ஒக்கும் முகத்தில் இப்பொழுது நிகழ்கின்ற வாட்டத்தையும் நோக்கானாய், முன்பு நன்றாகிய முலை இப்பொழுது பசந்த பசப்பையும் நோக்கானளாய், முன்பு கலாபமின்னும் அல்குலில் ஆடை மாசுண்ட தன்மையையும் நோக்கானாய்த் தானிறைஞ்சி நிற்றலின் அடியிற் சிலம்பொன்றையுமே நோக்கி எங்குளார் அடிகளென்று இப்படி ஒரு வார்த்தை கூறினானென்க" என்றார்.

நந்தட்டனின் நல்லொழுக்கமும், கணவனைப் பிரிந்து வருந்திய நிலையில் இருக்கும் காந்தருவதத்தையின் வாடிய மனநிலையாற் புலப்படும் கற்புநெறியும் தேவராற் சிறப்புறக் காட்டப்பெற்றன. திங்களைப் போல முன்பு திகழ்ந்த அவள் முகத்தையும் அவன் நோக்கியதில்லை; அது மாசுண்ட இன்றைய நிலையையும் நோக்கவில்லை. அவன் சீறடிச் சிலம்பொன்றுமே நோக்கிக் கூறினன் என்பது கருத்தாம். உயிரொழுக்க நெறியைக் காப்பியத்திற் புனையும் பாங்கு இது.

தொடரும்

தமிழ் இனிமைக் கோட்பாடு

முனைவர் அரசக்கண்ணன்

தமிழ் என்ற சொல்லுக்கு இனிமை என்று பொருள் கூறுவர். மதுரைத் தமிழ்ப் பேரகராதி இனிமை என்று பொருள் கூறுகிறது.[1]

தமிழ் என்ற சொல் இனிமை என்ற பொருளிலேயே இலக்கியங்களிலும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ் நிலைபெற்ற தாங்கரு மரபின்
மகிழ்நனை மறுகில் மதுரையும் வறிதே[2]

என்றும், "தமிழ்கெழு கூடல் தண்கோல் வேந்தே[3] என்றும், "தமிழ் வையைத் தண்ணம்புனல்"[4] என்றும், சங்க இலக்கியங்களில் இச்சொல் பயின்று வருகின்றது.

காப்பியங்களிலும் இச்சொல்லாட்சி இனிமை என்ற பொருளையே குறித்து வருகிறது. தமிழ் தழீஇய சாயலவர் என்று சீவகசிந்தாமணியில்[5] பயன்படுத்தப்படுகிறது. இதற்கு உரைகண்ட நச்சினார்க்கினியர் சாயல், கண்டார்க்கு இனிமை செய்தலான் இனிமை தழீஇய சாயலென்று குறித்தார். கம்பராமாயணத்தில் "தமிழ் பாட்டிசைக்குந் தாமரையே"[6] என்பதால் கேட்டார்க்கு இனிமை செய்தலால் இனிமையுடைய பாட்டை வண்டுகள் இசைக்கும் எனப் பொருள்படுகிறது.

தமிழ் இலக்கியங்களில் மட்டுமல்லாமல் பிற நாடுகளிலும் இச்சொல்லோடு ஒற்றுமையுடையதாகக் கருதப்படும் சொற்கள் இனிமை என்ற பொருளே கொள்ளுமாறு பயன்படுத்தப்பட்டு வருகின்றன. கடல் கோளால் பாதிக்கப்பட்டு எஞ்சிய பகுதியாகக் குறிக்கப்பெறும் சான்சிபர் நாட்டில் பேசப்படும் சுவாகிலி மொழியில் தமு என்னுஞ்சொல் இனிமை என்ற பொருளுணர்த்தவே பயன்படுத்தப்படுகிறது.

தமிழ் என்ற சொல் இனிமை என்ற பொருள்ள உணர்த்தப் பயன்படுத்தப்பட்டு வருவதோடன்றி, தமிழ் மொழியையே

இனிமையான மொழி என்றும் குறித்து வந்தனர். இச்செய்தி சமசுகிருத இலக்கியமான வால்மீகியின் இராமாயணத்தில் இடம் பெறுகிறது.

அனுமன் சீதையுடன் உரையாட "மதுரமான மொழியில் வைத்துக் கேட்பிப்பலென்று புகுந்தான்."[7] அவ்வாறு "மக்கள் மொழியாகக் கொண்ட இனிமை வாக்கு (மதுராங்கிரம்) தமிழ் என்னும் இனிய மொழி யாமென்று துணியப்படும்"[8] என்பர்.

இவ்வாறு தமிழ் இனிமைப் பொருள் குறித்ததென்று வழங்குவதோடன்றி, இனிமையான மொழியாம் என்றும் கூறுவது தமிழ் மொழியின் இனிய இயல்பை வெளிப்படுத்தும் கோட்பாடாகும். ஒரு மொழி இனிமை இயைந்து பொழிவதற்கு அடிப்படையான அம்மொழியில் இயல்பு அமைவுகளே காரணங்களாகின்றன. குறிப்பாக மொழியில் ஒலியொழுங்கு அமைவைப் பொறுத்ததாகும். அத்தகு நிலைகள் தமிழில் உள்ளன.

வடமொழியிலுள்ள மூச்சொலிகளோ, ஆங்கிலத்திலுள்ள உரசொலிகளோ, அராபியிலுள்ள உள்நா ஒலிகளோ தமிழில் இல்லை. வாய்மாட்டுப் பிறப்பதும், முயற்சி மிகக் குறைந்ததுமாகிய தடையொலிகளே தமிழில் உள்ளன. அவையும் வல்லொலி ஆறு, மெல்லொலி ஆறு, இடையொலி ஆறு என ஒரே அளவாகவும் அமைந்துள்ளன. அவ்வாறு அமைந்த தோடன்றி ஆறு வல்லொலிகட்கு ஏற்ப ஆறு இனமெல் லொலிகளும் உள்ளன. ஒலியினிமை மிகுவிக்குமாற் போல னகரத்தைத் தொடர்ந்து றகரமெய் வருவதும் ஓர்தற்பாற்று. (எ.க.) கன்று, தின்று, வென்று, என்று என்பன காண்க.

தமிழில் உயிரொலிகள் பிறக்கும் நிலைகள் தெளிந்த கோணங்களைப் பெறுகின்றன. நாமேல் எழுந்து முன்னோக்கிச் செல்வதால் இகரமும், பின்னோக்கிச் செல்வதால் உகரமும் பிறக்கின்றன. சிறிது நா உயரம் குறைந்து இடைநிலையில்

முன்னோக்கிச் செல்வதால் எகரமும், பின்னோக்கிச் செல்வதால் ஒகரமும் அதே இடைநிலை உயரத்தில் நா நடுநிலையில் அமைவதால் அகரமும் பிறக்கின்றன. இவ்வித ஒலிப்பிறப்புக் களினால் ஓர் ஒழுங்கு உண்டாகிறது. அவ்வொழுங்கே ஓர் இனிமைக்கும் அடித்தளமாக அமைகிறதெனில் பொருந்து மாற்றாம்.

தமிழ் எழுத்துக்கள் வல்லொலியில் முடியுமாறில்லை. வல்லொலிகள் உயிரொலிகளைக் கொண்டே முடிவுறும். குற்றியல் உகரங்கள் வல்லொளியை இசைக்கவே வருகின்றன. இவ்வாறு மொழியிறுதி உயிர்களில் முடிவதோடன்றி உயிரொடு ஒத்த நெகிழ்வொலிகளான மெல்லின, இடையின ஒலியசைவு ஏற்பட்டு மொழி இனிமை ஏந்துதற்கு இடனாகிறது.

தமிழில் சில மெய்யொலிகளின் அருகில் சில மெய்யொலிகள் வாரா என்று விதியுண்டு. (எ.டு.) "உயிர்மெய் யல்லன மொழி முதலாகா"[9] என்ற தொல்காப்பிய நூற்பாவால் இது காண்டதற்குரியது. அப்போது சாரியைகள் வந்து ஒலிச் சிறப்பைக் காக்கும். (எ.டு.) மரம் + கு = மரத்துக்கு, கண் + கு = கண்ணிற்கு, இப்பொழுது கண்ணுக்கு என உகரம் பெறுகிறது.

தனிக்குறில் முன் ர, ழ, வாரா. ரகார ழ காரங் குற்றொற்றாகா[10] என்பது தொல்காப்பியம். அதனால் இவை உகரம் பெறுகின்றன அல்லது முதல் நீள்கின்றன. (எ.டு.) ஓர்-ஒரு-ஓர், கர்-கரு, கார் அர்-அரு-ஆர், பெர்-பெரு-பேர், கொழ்-கொழு-கோழ் என்பன காண்க. இவ்வாறு மொழி இனிமை எய்தும் நிலை பெறுகிறது.

தமிழில் ஒவ்வொரு இடத்திலும் சில குறிப்பிட்ட ஒலிகளே வரும். அவற்றை முதல்நிலை, இறுதிநிலை, இடைநிலை மயக்கம் எனக் குறிப்பிடுவர். இவை பற்றி இலக்கண நூல்கள் விதிகள் வகுத்துள்ளன. தொல்காப்பியம் முதல்நிலை ஒலிகள் பற்றி 59-65 ஆகிய நூற்பாக்களிலும், இறுதிநிலை ஒலிகள் பற்றி 69-76, 78-81 ஆகிய நூற்பாக்களிலும், இடைநிலை மெய்ம் மயக்கம் பற்றி 23-29 ஆகிய நூற்பாக்களிலும் விளக்கம் தருகிறது.

நன்னூலும் விதிகள் கண்டுள்ளது. வீரசோழியம் முதலான நூல்களும் இம்மரபைப் போற்றுகின்றன. இவ்வாறு இலக்கண நூல்கள் கூறும் ஒலி அமையத்தக்க இடம் பற்றிய விதிகள் மொழியின் இனிமையைப் பேணி நிற்பனவாம். இவ்வாறான விதிகள் பிற மொழிகளில் இருப்பதாகத் தெரிந்திலது.

தமிழில் ஒலிக்கும் அளவை மாத்திரை என்பர்

"கண்ணிமை நொடியென அவ்வே மாத்திரை
நுண்ணிதின் உணர்ந்தோர் கண்ட வாறே"[11]

என்பது தொல்காப்பியம். இவ்வொலி குறில் என்றும், நெடிலென்றும் கூறப்படுகிறது. குறிலின் அளவு நீட்டித்தால் நெடிலாகிறது. நெடில் அளவு மிகுந்தால் அளபெடை ஆகிறது. இவ்வளபெடை இசை நோக்கத்திற்காக ஒலியின்பம் கருதியே கொள்ளப்படுவதாகும். ஒலி எளிமைக்காகவும், ஒலி நயத்திற்காகவும் ஒலிகள் அளவில் குறைந்து குறுக்கன்களாகவும் ஆகிவிடுகின்றன. அவை ஐகாரக் குறுக்கம், ஔகாரக்குறுக்கம், மகரக் குறுக்கம் எனப்படும். இவ்வொலிக் குறைவும் ஒலியின்பம் தரப்போந்ததே.

அம்மட்டோ! பிறமொழி ஒலிகள் தமிழில் புகுந்து, கலந்து இனிமை சிதையாதிருக்கும் பொருட்டாய்க் காப்பு முயற்சிகளாக இலக்கண நூல்களும் விதிகள் வகுத்துள்ளன.

வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ
எழுத் தொடு புணர்ந்த சொல்லாகும்மே[12]

என்பது தொல்காப்பியம். இது ஒலி மாற்றத்தையும், அவ்வொலி மாற்றம் தமிழ்ச் சொல்லமைப்புக்கு ஏற்ப இயைந்து தமிழொலியாக அமைதல் வேண்டும் என்பதையும் குறிப்பிடுகிறது. இதனையுட் கொண்ட வீரசோழியமும், நன்னூலும் இவ்விலக்கணத்தை மேலும் விரிவுபடுத்தியுள்ளது எனலாம்.

ஒரு மொழிக்குரிய அடிப்படை ஒலிகளும், அவை தொடருமாறும், அவை பெறும் இடங்களும் அடிப்படை

மரபாகும். இதனை ஒலி மரபு என்பர். ஒரு மொழியின் ஒலியமைப்பு எளிதில் மாறுவதில்லை என்பதே மொழிநூல் கண்ட உண்மை.

ஆதலின் தமிழின் இனிமை எஞ்ஞான்றும் சிதையா என்பதோடன்றி நிலை பேறினையும் கொண்டுள்ளது என்பது இக்கோட்பாடுகளால் விளக்கமுறும். இதனால் தமிழின் கன்னிமை புலனாகும். இவ்வடிப்படைத் தன்மைகளால் உந்தப்பட்டே.

யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல்
இனிதாவதெங்கும் காணோம்.
என்று பாரதியும் தமிழை விதந்தோதுவர்.

சான்றெண் விளக்கம்:

1.மதுரைத் தமிழ்ப் பேரகராதி 1956, பக்.1079

2.சிறுபாணாற்றுப்படை வரி.66, 67.

3.புறநானூறு 58

4.பரிபாடல் 67

5.சீவகசிந்தாமணி 2026

6.கம்பராமாயணம், பம்பைப்படலம், 29

7.வான்மீகி சுந்தரகாண்டம், சர்க்கம் 30, சுலோகம் 43

8.ரா.இராகவையங்கார், தமிழ் வரலாறு - 1952, பக்.8

9.தொல்காப்பியம் நூ 60

10.தொல்காப்பியம் நூ 49

11.தொல்காப்பியம் நூ 7

12.தொல்காப்பியம் நூ 884

அனுபவங்களின் எதிரொலி இலக்கியம்

பேரா.சி.சுந்தரி

செந்தமிழ்க்கல்லூரி, மதுரை.

அறிவியல் மூளையில் பிறக்கிறது; இலக்கியம் இதயத்தில் உதிக்கிறது. இலக்கியம் மனித வாழ்க்கையின் அனுபவத் தொகுப்பு. அது மனித சமுதாயத்தினின்று பிறப்பது. மனிதரால் படைக்கப்பட்டு மனித சமுதாயத்தைச் சென்றடைவது. கலையுணர்வும் வாழ்வின் எதார்த்தமும் இணைந்து தீட்டப்பட்ட ஓவியம். ஒரு சமுதாயத்தின் கடந்த கால இலாப நட்டக் கணக்குகள் அடங்கிய பேரேடு. எனவேதான் மனிதன் இலக்கியத்தைச் சிறந்த வழிகாட்டியாக நம்புகிறான்.

இலக்கியத்தின் பணி பன்முகப்பட்டது. அழகியல் கண்கொண்டு பார்ப்போருக்கு அழகின் ஊற்று. வரலாற்றுக் கண்கொண்டு பார்ப்போருக்கு வரலாற்றுக் கருவூலம். சமூகவியல் பார்வையைச் செலுத்துவோருக்கு சமூக, பண்பாட்டுப் பெட்டகம். அது மட்டுமா? இலக்கியத்தைப் பயிலுகின்றவர்கள் அதில் தங்கள் பிம்பங்களை அல்லவா பார்க்கிறார்கள். வாழ்வின் இலக்கினைக் காட்டுவதுதானே இலக்கியம். அப்படியல்லாதவை வெறும்பொழுது போக்குத் துணையே.

சுருக்கமாக நல்ல இலக்கியம்,

நண்பனாய், மந்திரியாய், நல்லாசிரியனுமாய்
பண்பிலே தெய்வமாய் பார்வையிலே சேவகனாய்

மனிதர்க்கு உதவுவது.

அறிவுக்குத் தந்தையாக:

தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தி யிருப்பச் செயல்.

இக்கடமையைச் செய்ய தந்தை தவறிவிட்டாலும் இலக்கியம் செய்யும். ஒருவன் தன் விடாமுயற்சியினால் சற்று உயர்ந்து வாழ்வில் முதனிலையை அடைய முடியும். இல்லாவிட்டால் பாட்டில்களைச் கழுவிச் சுத்தம் செய்யும் வேலை செய்து

கொண்டிருந்த சார்லஸ் டிக்கன்ஸ் உலகம் புகழும் நாவலாசிரியராக உருவாகியிருக்க முடியுமா? அல்லது இரவல் வாங்கிப் படித்த புத்தகத்தின் கருத்துக்களை மண்வெட்டியில் சுண்ணாம்புக்கட்டியால் எழுதிப் பார்த்துப் பழகிய ஆபிரகாம்லிங்கன் அமெரிக்க நாட்டுக் குடியரசத்தலைவராய் ஆகியிருக்க முடியுமா?

மனிதன் தன்னுடைய அறிவைத் தன்னுடைய சுற்றுப்புறச் சூழல்களிலிருந்து பெறுகிறான். தன் சொந்த அனுபவங்களினால் விளைந்த படிப்பினைகளால் வளர்த்துக் கொள்கிறான். இவையெல்லாம் ஓரளவிற்கே. பெரும்பங்கு அறிவினை மற்றவர்களின் அனுபவங்கள் தொகுத்து வைக்கப்பட்டிருக்கிற இலக்கியத்திலிருந்தே பெறுகிறான்.

அதிலும் வாழ்க்கை வரலாற்று இலக்கியம். அது தன் வரலாறாயிருப்பினும், பிறரால் எழுதப்பட்டிருப்பினும் அது கற்றுத் தருகிற பாடமே தனி. இலக்கிய வகைகளில் வாழ்க்கை வரலாற்று இலக்கியத்தைத் தந்தையாகக் கொள்ளலாம்.

திரு.வி.க.வின் தன் வரலாறு அதனைப் படிப்பவனைச் சான்றோனாக உருவாக்கக்கூடியது. மனைவி இறந்த பின் மறுமணம் செய்து கொள்ளாமல் ஒழுக்க நெறியில் நின்றவர். இந்தியாவில் முதன் முதலில் தொழிற்சங்கம் கண்ட தலைவர். ஆங்கில ஆட்சியை எதிர்த்துத் தனித் தமிழில் நவசக்தி நாளிதழ் நடத்தியவர்.

திரு.வி.க. கூறுகிறார்,

உலகத்தில் நீடூழி காலம் வாழ்வோர் ஒருவரும் இல்லை. தம்பொருட்டு வாழ்ந்து மரணம் அடைவதைக் காட்டிலும் பிறர்பொருட்டு வாழ்ந்து மரணம் அடைவது போற்றத்தக்கது. தம் பொருட்டு வாழ்ந்து இறப்போர் அடைவது நரகம். பிறர் பொருட்டு வாழ்ந்து இறப்போர் அடைவது மோட்சம், இஃதல்லவா வாழ்வின் உயர்ந்த தத்துவம்!

இதன்படி வாழ்ந்து காட்டியவர் காந்தியடிகள், என் வாழ்க்கை திறந்த புத்தகம், என்றார் அவர். அவருடைய தன் வரலாறு சத்தியசோதனை என்றல்லவா அழைக்கப்பட்டது. ஒரு

தனிமனிதனின் ஒழுக்க நெறியால் விளைந்த ஆன்மபலம் முப்பது கோடி மக்களையும் கட்டுப்படுத்திய விந்தையைக் கூறுவது அது.

சட்டை கூடப் போட்டுக் கொள்ளாத அந்த மெலிந்த உடலுக்கு எங்கிருந்து வந்தது அந்த சக்தி? அவர் இடையறாது, ஏன் இறக்கும்போது கூட உச்சரித்துக் கொண்டிருந்த இராமனுடைய காவியத்திலிருந்து பெற்றதல்லவா அது. கீதையில் உரைத்தபடித் தம்முடைய வாழ்க்கையை அமைத்துக் கொண்டவர் காந்தியடிகள்,

அவர், என்னைப் பொறுத்தவரையில்,எனக்கு வழிகாட்டும் தவறாத்துணையாகக் கீதை ஆகிவிட்டது... தெரியாத ஆங்கிலச் சொற்களின் பொருளை அறிவதற்கு நான் ஆங்கில அகராதியைப் புரட்டிப் பார்ப்பது போல் எனக்கு ஏற்படும் கஷ்டங்களுக்கும், சோதனைகளுக்கும் உடனே பரிகாரங்களைக் கண்டு கொள்ள இந்த ஒழுக்க நெறி அகராதியைப் புரட்டுவேன் என்கிறார்.

இலக்கியம் பயில்வது பொழுது போக்கி, மகிழ்ச்சி அடைவதற்கு என்று கொண்டால், அவற்றை இலக்கியத்திலிருந்து பெற வேண்டும் என்பதில்லை. அதற்கு வேறு பல சாதனங்களும் உதவக்கூடும். ஆனால் இலக்கியத்தினின்று பயன் பெறுதல் என்ற நோக்கினைக் கொண்டால் நல்ல இலக்கியத்தின் கருத்துக்களை ஏற்று நடத்தலேயாம். அத்தகையவர்களுக்கே இலக்கியம் சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே என்ற முறையில் உதவும்.

ஆறுதல் அளிக்கும் அன்னையாக

இலக்கியம் மனிதனின் பண்படாத உணர்வுகளைப் பண்படுத்துவது. அவனை மென்மைப்படுத்தி மேன்மைப் படுத்துகிறது. வாழ்க்கைப் பாதையின் கரடு முரடான பகுதிகள் அவனைக் குத்திக் கிழிக்கும்போது சிலபோது ஆவேசங் கொள்கிறான். சிலபோது அடங்கிச் செயலற்றுப் போகிறான். சிலபோது தன்மீதே வெறுப்புக் கொள்கிறான்.

வாழ்க்கை என்பது போராட்டம்
வாழ்க்கை என்பது வேள்வி
வாழ்க்கை என்பது கடல்
புண்ணில்லாத போராட்டம் இல்லை
தீயில்லாத வேள்வி இல்லை
புயலில்லாத கடல் இல்லை

புறவுலகப் போரில் புண்பட்டு நெஞ்சுக்குள்ளேயே இரத்தம் கசியப் பெற்றவர்கள் ஆறுதல் வார்த்தைக்காக ஏங்கித் தவிக்கிறார்கள். தேடியலைந்த ஆறுதல், மனிதர்களிடம் கிடைக்காதபோது அவர்கள் கடைசியில் ஆற்றல் வடிவான இறைவனைச் சரணடைகிறார்கள். புறவுலக அழுத்தமும் அடுத்தடுத்த சோதனைகளும் மனிதனை இறைவன் பால் திருப்புகின்றன. இத்தகைய மனிதருக்கு அன்பான அரவணைப்பையும் ஆறுதலையும் அளித்துத் தாயினும் சாலப்பரிவு காட்டுவது நீதி இலக்கியமும் பக்தி இலக்கியமும் ஆகும்.

வாழ்க்கையில் தவறு செய்யாதவர்கள் இல்லை. தவறு செய்யாமலே வாழ்வது சான்றாண்மைதான். ஆனால் சூழ்நிலை அழுத்தத்தால் அறிந்தோ அறியாமலோ தவறு செய்ய நேர்ந்துவிடுகிறது. தவறு செய்துவிட்டவர்கள் அதையே நினைத்துப் புலம்பிக் கொண்டிருப்பது தான் செய்துவிட்ட தவறுக்குப் பரிகாரமா?

வள்ளுவர் விடை சொல்கிறார்

எற்றென்று இரங்குவ செய்யற்க செய்வானேல்
மற்றுஅன்ன செய்யாமை நன்று

தவறு செய்திடல் கூடாது. செய்திட்டால் செய்த தவறை மீண்டும், செய்யாமலிருத்தலே தவறுக்குப் பரிகாரம் என்கிறார்.

கயவர் யாரேனும் நம்மைப் பார்த்து இழிவாகப் பேசிவிட்டால் அன்று முழுதும் நமக்குத் தூக்கம் வருவதில்லை. அவருடைய இழிசொல் நாளெல்லாம் நம்மை வாட்டும் வதைக்கும். அவருக்கு எப்படி பதில் கொடுப்பது என்று எண்ணி எண்ணி இளைப்போம். ஆனால் இழிமக்கள் பேச்சுக்கு மதிப்பே கொடுக்க

வேண்டியதில்லை என்று நாலடியார் நமக்கு ஆறுதல் சொல்லுகிறது. எப்படி?

கூர்த்து நாய் கௌவிக் கொளக்கண்டும், தம்வாயால்
பேர்த்து நாய் கௌவினார் ஈங்கு இல்லை; நீர்த்து அன்றிக்
கீழ்மக்கள் கீழ் ஆய சொல்லியக்கால், சொல்பவோ
மேன்மக்கள் தம்வாயால் மீட்டு?

நாய் கடித்தால் திருப்பிக் கடிப்பவர் உண்டோ? கீழ்மக்கள் பேச்சுக்கு எதிர்ப்பேச்சு உரைத்தல் அதுபோலவே அமையும் என்கிறது.

எவ்வளவுதான் உலகியலில் நைந்தாலும் மனமோ இறைவனை நாட மறுக்கிறது. மீண்டும் மீண்டும் உலகியல் துன்பங்களிலேயே உழல்கிறது. எத்தனை முறை முயன்றாலும் இறைவனைப் பற்றிச் சிந்திப்பதில் தோல்விதான். இதனால் நம்மீதே நமக்கு எரிச்சல் வருகிறது. இந்த அனுபவம் நமக்கு மட்டுமா? மாணிக்கவாசகரும் கூட இப்படிப் புலம்பியிருக் கிறாரே. ஆனால் அவர் கூறுவது பொதுவாக மனிதர்களின் மனநிலை எப்படியிருக்கிறது என்பதை எடுத்துக் காட்டுவதற்காக. அவரும் நம்மைப் போல்தான் மனத்தை இறைவன்பால் நிலைநிறுத்த முடியாமல் தவித்திருக்கிறார் என்பதை அறியும்போது நமக்கு ஒரு திருப்தி. அதேவேளையில் நாமும் ஒருநாள் இறைவன்பால் மனத்தை உறுதியாக நிலைநிறுத்த முடியும் என்ற நம்பிக்கையையும் தருகிறது. குழந்தை தடுமாறிக் கீழே விழுந்து அழுகிறது. தாய் என்ன சொல்லியும் குழந்தை தன் வலியையே பெரிதாக நினைக்கிறது. உடனே தாய் ஒரு தந்திரைத்தைக் கையாள்கிறாள். தனக்கும் அடிபட்டதாக வலிப்பது போல் பாசாங்கு செய்கிறாள். பொய்யாக அழுகிறாள். அதைப்பார்த்துக் குழந்தை தன் வலியை மறந்து அழுகையை நிறுத்துகிறது. அதையேதான் மாணிக்கவாசகரும் செய்கிறார்.

வாழ்கின்றாய் வாழாத
நெஞ்சமே வல்வினைப்பட்டு
ஆழ்கின்றாய் ஆழாமல்
காப்பானை ஏத்தாதே

சூழ்கின்றாய் கேடு உனக்கு
சொல்கின்றேன் பல்காலும்
வீழ்கின்றாய் நீ அவலக்
கடல் ஆய வெள்ளத்தே

ஆழ்வார்கள் பாடலும், இராமாயணக் காதையும் பெரியபுராணமும் இன்னோரன்ன நீதி, பக்தி இலக்கியங்களும் நமக்கு, வையத்துள் வாழ்வாங்கு வாழும் முறையையும் ஒழுக்க நெறியையும் தாயாக நின்று மென்மையாகக் கற்பிக்கின்றன. அவற்றைப் புரிந்து கொண்டு அவ்வழி நிற்றல் நம்மை மேன்மையுறச் செய்யும்.

இடித்துரைக்கும் நண்பனாக

உலகம் எப்படியிருக்கிறது என்று சொல்வது மட்டும் இலக்கியம் அன்று. உலகம் எப்படியிருக்க வேண்டும் என்றும் அது சொல்ல வேண்டும். வாசகனுக்கும், படைப்பாளிக்கும் என்ன வேறுபாடு? வாசகனும் படைப்பாளி பார்க்கும் எல்லாப் பொருள்களையும் பார்க்கிறான். அப்போது நெஞ்சில் பல்வேறு உணர்ச்சிகளுக்கு ஆட்படுகிறான். இந்த நிலைவரை வாசகனும் படைப்பாளியும் ஒரே மாதிரியாகத்தான் காட்சியளிக்கிறார்கள். ஆனால் வாசகன் பார்த்து, உணர்ச்சி வசப்பட்டு, பின்னர் மறந்து விடுகிறான். படைப்பாளி மட்டுமே தான் கண்ட காட்சிக்கு நெஞ்சில் உருவமைத்துச் சொல்லால் உயிரூட்டுகிறான். மாந்தரின் பொதுவான உணர்ச்சிகளுக்குத் தன் படைப்பால் சிரஞ்சீவித்துவம் வழங்குகிறான். அப்படிப் படைக்கப்பட்ட இலக்கியம் மனிதனுக்கு மகிழ்ச்சியூட்டினால் மட்டும் போதுமா? இல்லை! மனிதனை, சமுதாயத்தை இருந்த நிலையிலிருந்து மேலேற்ற உயர்வடைய உதவுவதாய் அது இருக்க வேண்டும். அதனால்தான் உணர்ச்சி வயப்பட்ட படைப்பாளி தனி மனித அல்லது சமூகத் தீமைகளைக் காணும்போது முகத்தில் அறைவது போல எழுதி வைத்துச் செல்கிறான். தற்கால இலக்கியமான நாவல், சிறுகதை, நாடகம், கவிதை ஆகியன இந்தப் பணியைத்தான் செய்கின்றன. இடித்துரைக்கும் நண்பனாக இவ்விலக்கியங்கள் நடந்து கொள்கின்றன. அப்படியில்லா விட்டால், சமுதாயம்

"இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானும் கெடும்," என்பது போலாகி விடும்,

பாரதி சொல்கிறான் பாப்பாவிற்கு,

"பாதகம் செய்பவரைக் கண்டால் - நம்
பயங்கொள்ள லாகாது பாப்பா!
மோதி மிதித்து விடு பாப்பா! - அவர்
முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பா!" - என்று

இதையே பாரதிதாசன்,

"கொடுவாளினை எடடா மிகு
கொடியோர் செயல் அறவே" என்று முழங்குகிறார்.

நாம் இலக்கியத்தில் படித்துச் சுவைக்கும் செய்திகளை நாட்டில் நடைமுறையில் நடத்திக் காட்டினால் யாருக்கும் பிடிப்பதில்லை.

நாடகத்தில் காவியத்தில் காதலென்றால்
நாட்டினர்தாம் வியப்பெய்தி நன்றாமென்பார்
ஊரகத்தே வீட்டினுள்ளே கிணற்றோரத்தே
ஊரினிலே காதலென்றால் உறுமுகின்றார்
பாடைகட்டி அதைக் கொல்ல வழிசெய்கின்றார்

என்று பாரதி கோழைகளுக்கு நண்பனாய் இடித்துரைக்கிறார். பாரதி வாழ்ந்த காலத்தில் வறுமையில் நாளும் செத்தான். யாரும் கண்டு கொள்ளவில்லை - பராசக்தி கூட என்பதைச் சொல்லி நம்மை இடித்துரைக்கிறார் கவிஞர் வைரமுத்து.

அவன்

"காணிநிலம் கேட்டு
மாதா பராசக்திக்கு
மனுச் செய்தான்
அவளோ
அவன்
கல்லறைக்குக்கூடக்
காணி நிலம் தரவில்லை." இதில் நம் பங்கும் இருக்கத்தானே செய்கிறது!

நம்மையொத்த மனிதர்களின் வாழ்க்கையும் போராட்டமும் நாவல்களிலும், சிறுகதைகளிலும் படைத்துக் காட்டப்படுவதால் நாம் அவற்றில் வரும் மாந்தரை இனங்கண்டு கொள்கிறோம். நம்மைப் பற்றி நாம் நினைத்துக் கொள்வது, நம்மைப் பற்றி மற்றவர்கள் நினைப்பது, நம்மைப் பற்றி மற்றவர்கள் என்ன நினைத்துக் கொள்வார்களோ என்று நாம் நினைத்துக் கொண்டிருப்பது ஆகிய சிந்தனைகளின் தொகுப்புக்களை நாவல்களில் நாம் காண முடிகிறது.

நாம் பணத்திற்கு அதிகமாக மதிப்புக் கொடுத்து மனித உறவின் மதிப்பைக் கெடுத்து விட்டோம். அப்படிப்பட்ட வாழ்க்கையில் அமைதி எங்கே இருக்கும் என்கிறார் டாக்டர் மு.வ. அவர், தம்முடைய "**நெஞ்சில் ஒரு முள்**" என்ற நாவலில் அறத்தின் கோயிலா விளங்க வேண்டிய இல்வாழ்க்கை, காதல், ஆண்-பெண் உறவு, பெற்றோர்-மக்கள் அன்பு, உடன் பிறந்தோர் கடமை, சுற்றத்தார் தொடர்பு, நட்பு என்பவைகளின் இடத்தையெல்லாம் பணம் கைப்பற்றிக் கொண்டிருக்கும்போது அமைதி இருக்குமா? என்று கேட்கிறார் உண்மைதானே!

பெண்ணுக்கு எந்த அளவிற்கு நாம் மதிப்புக் கொடுத்திருக்கிறோம்? காண்டேகர் தம்முடைய, வெறும்கோயில் என்ற நாவலில் கூறுகிறார் இப்படி. பெண் தெய்வத்தைப் போல் போற்றப்பட்டாலும் அது வீட்டுக்குள்ளேதான் நடக்கும். அவளவள் அதிர்ஷ்டப்படி கணவனோ, மகனோ, வேறு எவனோ பக்தியுடன் அவள்மீது மலர் தூவுவான். ஆனால் வீட்டிற்கு வெளியே அவள் செல்லத் தொடங்கினால் பாதையில் முட்களும், தீப்பொறிகளும் இருக்கின்றன.

தற்கால இலக்கியம் நம்மைப்பார்த்து, உணர்ந்துதான் படைக்கப்படுகிறது. நம்முடைய குறைகளை அவை இடித்துத்தான் சொல்கின்றன. ஆனாலும் திருந்துவோமா? நமக்குத்தான் குறையைச் சுட்டிக் காட்டும் நண்பனைப் பிடிக்காதே! இருப்பினும் நம்முடைய சுயநலம் கருதியாவது அவற்றிலுள்ள நன்மைகளைக் கடைப்பிடிக்க முயல்வோம்.

தமிழ் ஒரு செவ்வியல் மொழி

ஜி.ஜான் சாமுவேல்

உலகச் செவ்வியல் மொழிகளின் வரிசையில் தமிழ்மொழி தனக்கென ஒரு தனி இடத்தைப் பெற்றுத் திகழ்கின்றது. 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட, தொடர்ந்து வருகின்ற மிகப் பெரிய வரலாற்றுப் பாரம்பரியத்தை இந்த மொழி பெற்றுத் திகழ்கின்றது. கிறிஸ்து பிறப்பதற்கு முன்னரே தோன்றிய ஏராளமான அரிய தரம்வாய்ந்த இலக்கியப் படைப்புகள் இம்மொழியில் உள்ளன. திராவிட மொழிகளின் ஒப்பற்ற பிரதிநிதியாக அல்லது திராவிட மொழிகள் பேசும் மக்களின் ஒட்டுமொத்தமான பண்பாட்டுக் குறியீடுகளாக தமிழ்மொழியும் அதன் இலக்கணக் கோட்பாடுகளும் காட்சி தருகின்றன. நீண்ட நெடுங்காலமாகத் தொடர்ந்து வருகின்ற வரலாற்றுப் பண்பாட்டுப் பாரம்பரியங்களையும் வளர்ச்சியினையும் இம்மொழிகளில் தோன்றிய இலக்கியங்கள் பெற்றுத் திகழ்கின்றன, அன்று முதல் இன்று வரை தொடர்ந்து வரும் இம்மொழியின் இலக்கியப் பாரம்பரியங்கள் பேராற்றிலிருந்து விரிந்து பெருக்கெடுத்துப் பாயும் கிளைநதிகளைப் போன்று ஏராளமான பிரிவுகளையும் கிளைகளையும் பெற்றுப் பாய்ந்து பரந்துள்ளன. இம்மொழியிலிருந்து கிளைத்தெழுந்த கிளை மொழிகள் பற்பல திராவிட மொழிக்குடும்பத்தின் மிகப் பழமையான மொழியாகத் திகழும் தமிழ்மொழி திராவிடப் பண்பாட்டின் பல்வேறு கூறுகளைத் தன்னகத்தே பெற்றுத் திகழும் உயர்தனிச் செவ்வியல் மொழியாகக் காட்சி தருகின்றது. வடமொழிகளில் தலைமையிடத்தைப் பெறும் சமஸ்கிருத மொழிக்கு இணையான தோற்றத்தினையும் சிறப்பினையும் தொடக்க காலத்திலிருந்து தமிழ்மொழி பெற்றுத் திகழ்கின்றது. சமஸ்கிருத மொழியின் பொதுமைப் பண்புகள் பலவற்றைப் பகிர்ந்து கொண்ட போதிலும் தமிழ்மொழி தனக்கெனப் பல தனித்தன்மைகளையும் சிறப்புப் பண்புகளையும் பெற்ற ஒரு பண்பட்ட மொழியாகத் திகழ்கின்றது.

ஏனைய திராவிட மொழிகளைப் போன்று தமிழ்மொழி கெல்டிக் மொழி, ஜெர்மன் மொழி, இலத்தின் மொழி, கிரேக்க மொழி, போன்ற ஐரோப்பிய மொழிகளையும் கீழைத்தேச மொழிகளான இரானியன் போன்ற மொழிகளையும் ஓரளவுக்கு ஒத்துக் காட்சியளிக்கின்றது. திராவிட மொழிக்கும் பினிசிய மொழிக்கும் இடையே உள்ள ஒப்புமைகள் பலவற்றைப் பேராசிரியர் பரோ விளக்கிச் சென்றுள்ளார். இவ்வாறே ஹங்கேரிய மொழிகள் தமிழ்மொழி ஆகியவற்றின் இடையேயுள்ள ஒற்றுமைக் கூறுகள் பேராசிரியர் ஜி.எஸ்.பாலின்ட் (G.S.Balint) போன்றோரால் விளக்கிக் காட்டப்பட்டுள்ளன. கொரிய மொழிக்கும் தமிழ் மொழிக்கும் இடையே உள்ள உறவுகள் பற்றிப் பேராசிரியர் எச்.பி.ஹப்பர் (H.B.Hubber) என்பவரும் தமிழுக்கும் ஜப்பான் மொழிக்கும் இடையே உள்ள ஒப்புமைப் பண்புகள் பற்றிப் பேராசிரியர் சுசுமோ ஆனோ என்பவரும் விரிவாக ஆராய்ந்துள்ளனர்.

தமிழ் மொழியைப் பேசுவோரின் எண்ணிக்கை ஏறத்தாழ ஏழு கோடி என்று கணக்கிடப்பட்டுள்ளது. இம்மொழியைப் பேசுபவர்கள் அதிகமாகத் தமிழகத்திலும் இலங்கையின் பல பகுதிகளிலும் மலேசியா, சிங்கப்பூர், இந்தோனேசியா, தாய்லாந்து, பர்மா, பிஜி போன்ற பல்வேறு நாடுகளிலும் வாழ்ந்து வருகின்றனர். தமிழகத்திலும், இலங்கையிலும், சிங்கப்பூரிலும் இது ஆட்சி மொழியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இந்திய மொழிகளில் தமிழ் சமஸ்கிருதம் ஆகிய இரு மொழிகளும் உலகளாவிய நிலையில் பல்வேறு நாட்டின் அறிஞர்களாலும் ஆழ்ந்த ஆய்வுகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

தமிழ்மொழி கிறிஸ்து பிறப்பதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் இருந்தே சிறப்பு மிக்க இலக்கிய இலக்கணப் பண்பாட்டுப் பாரம்பரியங்களைப் பெற்றுத் திகழ்கின்றது. புராதனத் தமிழர்கள் அல்லது திராவிடர்களின் நாகரிகம், பழைய எகிப்திய, சுமேரியா, சிந்து சமவெளி நாகரிக காலங்களை ஒட்டித் தொடங்கி உள்ளது எனலாம். இம்மொழியினுடைய இலக்கிய

மரபுகளின் வரலாறு 2000 ஆண்டுகளுக்கு முன்னரே வளம்பெற்று எந்த இடைவெளியும் இன்றித் தொடர்ந்து வருவதைக் காண்கின்றோம். தற்காலத்தில் பேச்சு வழக்கில் இருக்கின்ற உலக மொழிகளில் மிகவும் தொன்மையான மொழி தமிழ் என்பதில் ஐயம் இல்லை. திரைகடல் ஓடியும் திரவியம் தேடும் இயல்பினைக் கொண்ட தமிழ்மக்கள் பல நாடுகளுக்கும் தொன்று தொட்டே சென்று வந்ததன் விளைவாக இவர்தம் பண்பாட்டுக் கூறுகளை பர்மா, இலங்கை, தென்கிழக்கு ஆசிய நாடுகளிலும், ஆப்பிரிக்கா, ஐரோப்பா, அமெரிக்கா போன்ற நாடுகளிலும் நாம் காண முடிகிறது.

உலகின் பல்வேறு மொழிக்குடும்பங்களோடு உறவு கொண்டுள்ள 25க்கு மேற்பட்ட திராவிட மொழிகள் இந்திய நாடு முழுவதிலும் சிந்திச் சிதறிக் கிடக்கின்றன. திராவிட மொழிகளின் முக்கியமான பிரதிநிதியாக தமிழ்மொழி அமைந்துள்ளது. இன்று வழக்கில் உள்ள திராவிட மொழிகளின் சொற்களை எல்லாம் அவற்றின் தொன்மையான வடிவங்களுக்கு மீட்டுருவாக்கம் செய்யும்பொழுது பழந்தமிழ் இலக்கியங்களில் காணப்படுகின்ற சொற்களைப் பிரதிபலிப்பவை போன்று அமைவதைக் காணலாம். இந்நிலையில் இந்தோ ஐரோப்பிய மொழிகளுக்குப் பிரதிநிதியாக சமஸ்கிருத மொழி திகழ்வதைப் போன்று திராவிட மொழிகளின் பிரதிநிதியாகத் தமிழ்மொழி திகழ்கின்றது என்று துணிந்து கூறலாம்.

தமிழ்மொழியையும், தமிழ் இலக்கியக் கோட்பாடுகளையும் செவ்வியல் நிலைக்குத் தரப்படுத்தும் முயற்சி 2000 ஆண்டுகளுக்கு முன்னரே தொடங்கியது. தொல்காப்பியம் குறிப்பிடும் கவிதை மரபுகளும் இலக்கியக் கோட்பாடுகளும் இந்த முயற்சிகளின் மணிமுடிகளாக அமைகின்றன. மொழியில் இடம் பெறும் ஒலியன்கள் பிற மொழிச் சொற்களைக் கடன் வாங்கும் முறை போன்றன பற்றிய விதிகளை இந்தப் பழம் பெருந்தமிழ் இலக்கணம் பாங்குற எடுத்தியம்புகின்றது. இவ்வாறு தரப்படுத்தப்பட்ட செவ்வியல் மொழியை செந்தமிழ் என்று

பழந்தமிழர் குறிப்பிட்டுள்ளனர். வட இந்திய மொழிகளில் தரப்படுத்தப்பட்ட வடிவத்திற்கு அம்மொழிகளின் அறிஞர்கள் சமஸ்கிருதம் என்னும் பெயரைத் தந்தது போன்றே பழம் தமிழர்களும் செவ்வியல் நிலைக்குத் தரப்படுத்தப்பட்ட தமிழ் மொழியைச் செந்தமிழ் என்று குறிப்பிடுகின்றனர். இதிலிருந்து செவ்வியல் மொழி என்னும் கோட்பாடு பற்றித் தமிழர்கள் மிகத் தெளிவான சிந்தனைகளைப் பெற்றிருந்தனர் என்றும் தம் தாய் மொழியினை ஒரு செவ்வியல் மொழியாக மாற்றுவதற்கு எல்லா முயற்சிகளையும் அவர்கள் மேற்கொண்டு வந்துள்ளனர் என்பதும் புலனாகும். இம்முயற்சி கிரேக்கர்களோடு தமிழர்கள் தொடர்பு கொள்வதற்கு முன்னரே ஏற்பட்டுள்ளது என்று கில்பர்ட் ஸ்லேட்டர் என்ற அறிஞர் குறிப்பிட்டுள்ளார். தமிழ்மொழி கிரேக்கத்தை விடவும் பண்பட்டது எனவும் இலத்தின் மொழியை விட அழகானது என்றும் ஆங்கிலம், ஜெர்மன் ஆகிய மொழிகளை விட ஆற்றல்மிக்கது என்றும் வின்ஸ்லோ (Winslow) என்ற அறிஞர் குறிப்பிட்டுள்ளார். செவ்வியல் மொழியான தமிழ் மொழியின் சங்ககாலப் படைப்புகள் கிரேக்க மொழியின் தேர்ந்து எடுக்கப்பட்ட தன்னுணர்ச்சிக் கவிதைகளோடு ஒப்பிடும் தகுதியை உடையன என்பதும் உலகின் தேர்ந்தெடுக்கப்பட்ட இலக்கிய வரிசையில் அவை வைத்துப் பாராட்டத்தக்கன என்றும் பியர் மெய்லி (Pierri Meilli) என்ற பிரெஞ்சு நாட்டு இந்தியவியல் அறிஞர் குறிப்பிடுகின்றார்.

இந்திய நாட்டின் இரு செவ்வியல் மொழிகளில் ஒன்றான இந்தோ ஆரிய மொழிக் குடும்பத்தைச் சார்ந்த சமஸ்கிருத மொழி பற்றிய ஆய்வினைக் கடந்த இரு நூற்றாண்டுகளில் மேலை நாட்டு அறிஞர்களும் கீழை நாட்டு அறிஞர்களும் சிறப்பாக மேற்கொண்டுள்ளனர். இடையறாத இத்தகைய அரிய முயற்சியின் விளைவால் கிரேக்கம் இலத்தின் ஆகிய மொழிகளைப் போன்று உலகச் செவ்வியல் மொழிகளில் ஒன்றாகக் கருதப்படும் நிலையினை சமஸ்கிருத மொழி பெற்றுள்ளது. எனினும் தமிழ்மொழி பற்றியும் இந்தியவியல் ஆய்வில் தமிழ்மொழி பண்பாடு ஆகியன பெற வேண்டிய இடம்

பற்றியும் ஆராயும் முயற்சி போதுமான அளவிற்கு இக்கால கட்டங்களில் மேற்கொள்ளப் படவில்லை. எனவே, தொடக்க நிலையில் உலக அறிஞர்கள் தமிழியல் பற்றிய ஆய்வை ஓரளவிற்குப் புறக்கணித்தே வந்துள்ளனர்.

பிரான்சு நாட்டின் தலைசிறந்த இந்தியவியல் ஆய்வாளரான டாக்டர் பிலியோசா உலக அரங்கில் தமிழியல் ஆய்வு அல்லது திராவிடவியல் ஆய்வு புறக்கணிக்கப்பட்டதற்கு இரு காரணங்களைக் குறிப்பிடுகின்றார். தொடக்க நிலையில் இந்தியாவிற்கு வருகை தந்த ஐரோப்பிய அருட்தொண்டர்கள் தங்கள் சமயப் பணிகளைத் தமிழ்நாட்டில் தொடங்கி அகராதிகளைப் படைத்தல் இலக்கண நூல்களை எழுதுதல் போன்ற அரிய பணிகளைத் தமிழகத்திலே ஆற்றி வந்துள்ளனர். கி.பி.18ஆம் நூற்றாண்டு அளவில் இவர்தம் பணி கல்கத்தா மாநகரத்தைச் சுற்றி வளர வேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டுள்ளது. எனவே தமிழகத்தோடு அவர்களுக்கு இருந்த தொடர்பு காலப்போக்கிலே குறைந்துவிட்டது. இந்த நிலையில் பழைய இந்தியவியல் ஆய்வாளர்களின் பெரும் பகுதியினர் இந்தியப் பண்பாட்டிற்குத் தமிழ்ப்பண்பாடு நல்கியுள்ள பங்களிப்பினைச் சரிவர உணரத் தவறிவிட்டனர்.

தொடக்க நிலையில் வால்டர் எலியாட் (Walter Elliot) எல்லிஸ் (Ellis) கோவர் (Gover) வின்ஸ்லோ (Winslow) கால்டுவெல் (Caldwell) போப் (Pope) போன்ற அறிஞர்கள் திராவிடக் கலாச்சாரம் பற்றி ஆய்வும் தமிழ்ப் பண்பாடு பற்றி ஆய்வும் மேலை நாட்டினரால் புறக்கணிக்கப்பட்டது பற்றிய தங்கள் ஆதங்கங்களை வெளிப்படுத்தியுள்ளனர். தமிழ்மொழி இந்திய நாட்டிலுள்ள எந்த மொழிக்கும் தரத்தில் குறைந்ததல்ல எனினும் பெரும்பாலான மக்கள் இதனைச் சாதாரண மக்கள் பேசும் ஒரு சிறு மொழியாக மட்டுமே கருதி வந்துள்ளனர். இந்திய அரசோ, பல்கலைக்கழகங்களோ தமிழ் இலக்கியத்தின் சிறப்பை மதிக்கவோ, தமிழ்மொழியின் சிறப்பை மதிக்கவோ, தமிழ்மொழியின் தொன்மை இலக்கியங்கள் பற்றிய ஆய்வினை

மேற்கொள்வதில் அதிக ஈடுபாடு காட்டவோ செய்யாமல் இருந்து விட்டனர் என்றெல்லாம் அவர்கள் பேசிச் சென்றுள்ளனர். மேற்கூறிய அவல நிலை 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் சற்று மாறத் தொடங்கியுள்ளது. பல்வேறு தேசிய சர்வதேசக் காரணங்களால் இந்தியவியல் பற்றிய ஆய்வில் தமிழியல் பற்றிய ஆய்வுக்குச் சிறப்பிடம் தரும் போக்கு மலர்ந்தது. தெற்கு ஆசியவியல் பற்றிய ஆய்விலும் தென் கிழக்கு ஆசிய நாடுகள் பற்றிய ஆராய்ச்சியிலும் தமிழியல் ஆய்வு இடம் பெறத் தொடங்கியது. இந்தியாவின் இன்றியமையாத மொழி என்ற நிலையிலும் சமூகவியல், மானிடவியல் பற்றிய ஆய்வுக்கு அடிப்படையான மொழி என்ற நிலையிலும், அமெரிக்கா நாட்டின் பென்சில்வேனியா, சிகாகோ போன்ற பல்கலைக்கழகங்கள் தமிழ் பற்றிய கல்விக்குச் சிறப்பிடம் தரத் தொடங்கின. தெற்காசியா பற்றிய கல்வித் திட்டங்கள் பல்கலைக் கழகங்களில் நிறுவப்பட்டபோது தமிழ் பற்றிய ஆய்வுக்கு மேலும் அமெரிக்க நாட்டில் சிறப்பிடம் தரப்பட்டது. அமெரிக்கா நாட்டு இந்தியவியல் ஆய்வு நிறுவனம் (American Institute of Asian Studies) தோற்றம் பெறவே இந்த வாய்ப்புகள் மேலும் அதிகரித்தன. தமிழியல் ஆய்வின் பல்வேறு கூறுகளில் ஈடுபாடு காட்டிய பல அறிஞர்களுக்கு (R.E.Frykenberg, Burton Stein, Eugin, F.Irschek) இந்த நிறுவனம் போதிய நிதியுதவி நல்கித் தமிழ் ஆய்வு மேற்கொள்ளத் துணை நின்றது.

காலப்போக்கில் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம், கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம், லெய்டன் பல்கலைக்கழகம், சுவீடன் நாட்டின் உப்சாலா பல்கலைக்கழகம், ஜெர்மன் நாட்டின் சில பல்கலைக்கழகங்கள் ஆகியன தமிழ் மொழிக் கல்விக்கும் தமிழ் ஆய்வுக்கும் சிறப்பிடம் தந்தன. பான் (Bonn) பல்கலைக்கழகமும் ஸ்டாக்கோம் (Stockholm) பல்கலைக்கழகமும் தமிழ் மொழியைத்தமது கல்வித் திட்டத்தில் அறிமுகப்படுத்தின ருசிய நாட்டைச் சார்ந்த அறிஞர்களும் அவர்தம் மாணாக்கர்களும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் தமிழ் ஆய்வு சிறக்கத் துணை புரிந்தனர். இதனைத் தொடர்ந்து ஆஸ்திரேலியா, கனடா,

தென்அமெரிக்கா, இஸ்ரேல், இத்தாலி, ஜப்பான், பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளும் தமிழ் ஆய்வுக்குச் சிறப்பிடம் தரத் தொடங்கின. மலேயா பல்கலைக்கழகத்தில் இந்தியவியல் ஆய்வுக்கு என்று தனித்துறை நிறுவப்பட்டபோது தமிழாய்வு இந்நாட்டில் மிக முக்கியமான இடத்தைப் பிடித்துக் கொண்டுவிட்டது.

சர்வதேச அறிஞர்களும் நம்நாட்டு இந்தியவியல் ஆய்வாளர்களும் இந்தியப் பண்பாடு பற்றிய முழுக் கண்ணோட்டம் பெறத் தமிழாய்வு மிகவும் தேவை என்பதைத் தெளிவாக உணர்ந்துள்ளனர். சமஸ்கிருதத்தை மட்டும் பயின்றுவிட்டு இந்தியப் பண்பாட்டில் முழு வீச்சையும் தெளிவாக உணர முடியாது என்று தெளிவாக அவர்கள் தெரிந்து கொண்டனர். திராவிட மொழியின் தலைமை மொழியான தமிழ்மொழி, தமிழ்ப்பண்பாடு பற்றிய கண்ணோட்டம் இல்லாமல் இந்தியப் பண்பாட்டை முழுமையாகப் புரிந்து கொள்ள முடியாது என்று அவர்கள் உணரத் தொடங்கினர். இந்தியப் பண்பாடு, இந்திய சமயங்கள் என்ற ஆடைக்கு திராவிடப் பண்பாடும், ஆரியப் பண்பாடும் ஊடும்பாவுமாக அமைந்து துணை சேர்க்கின்றன என்று சிறந்த இந்திய மொழியியல் அறிஞரான டாக்டர்.சுனித்குமார் சட்டர்ஜி குறிப்பிட்டுள்ளார். இந்தியப் பண்பாட்டின் வளர்ச்சிக்கு திராவிடர்களின் பண்பாட்டின் பங்களிப்பு 50 விழுக்காட்டிற்கும் குறைவாக இல்லை என்று அவர் குறிப்பிடுவதைக் காண்கிறோம்.

கடந்த 50 ஆண்டுகளில் சிந்து சமய நாகரிகம் தொடர்பான கண்டுபிடிப்புகளும் ஹரப்பா, மொகஞ்சதாரோ போன்ற பகுதிகளில் நடைபெற்ற அகழாய்வுகளும் திராவிடர்கள் அல்லது தமிழர்கள் இந்தியப் பண்பாட்டிற்கு நல்கியுள்ள பங்களிப்பைப் பற்றித் தெளிவாக உணரத் துணைநின்றுள்ளன. மொகஞ்சதாரோ பகுதிகளைக் கண்டறிந்த பேராசிரியர் பானர்ஜி (R.D.Banerji) போன்ற அறிஞர்கள் இந்தியநாட்டில் ஆரியர்கள் வருவதற்கு முன்னர் பழைய நாகரிகம் நிலவியதாகவும், இந்நாகரிகம்

திராவிடர்களுடையது என்றும் அவர்களுடைய மொழிகளாகத் தென்னிந்தியப் பகுதிகளில் பேசப்படும் திராவிடமொழிகள் அமைவதாகவும் கூறிச் சென்றுள்ளனர்.

2000 ஆண்டுகளுக்கு முன்னர் மிகச் சிறப்பான இலக்கண வரையறைகளைத் தமிழர்கள் வகுத்துக் கொண்டுள்ளனர் என்பதையும் அவர்தம் விழுமிய இலக்கணக் கோட்பாடுகள், உலகின் எந்தச் செவ்வியல் மொழியின் இலக்கணக் கோட்பாட்டிற்கும் பின்தங்கியது அல்ல என்பதையும் அறிய முடிகின்றது. பிறமொழிக்கலப்பின் போதும், சொற்களைக் கடன் வாங்க வேண்டிய தேவை ஏற்படும்போதும் தமிழ் மொழியின் ஒலி அமைப்பிற்கேற்ப அவற்றை மாற்றிக் கையாளும் போக்கு தமிழ் அறிஞர்களிடம் தொன்று தொட்டு இருந்து வந்ததைக் காண்கின்றோம். வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே ஏராளமான சொற்களை வடமொழிக்குத் தமிழ் வழங்கியுள்ளது என்பதை பேராசிரியர் (T.Burro) பரோ மிக விரிவாக ஆராய்ந்துள்ளார். தற்கால மொழியியலார் பேசுகின்ற அறிவியல் கோட்பாட்டின் வழி அமைந்த மொழி அணுகுமுறைகளைப் பழந்தமிழர் கையாண்டிருந்தனர் என்பதற்கு அவர் தம் பழைய இலக்கண நூல்களே சான்றாக அமையும். ஒலியன் (Phoneme) பற்றிய கோட்பாடுகளைத் தமிழ் மொழி மிகச் சிறப்பாக விளக்கி உள்ள பாங்கினை டானியல் ஜோன்ஸ் போன்ற தற்கால மொழியியல் அறிஞர்கள் வியந்து பாராட்டியுள்ளனர். தொல்காப்பிய எழுத்ததிகாரத்தைப் பயின்ற சமஸ்கிருத அறிஞரான சி.ஆர்.சங்கரன் என்பவர் பாணினியை விடவும் பண்பட்ட இலக்கணக் கோட்பாடு தொல்காப்பியத்தில் உள்ளதைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த பல ஆண்டுகளாக உலகெங்கிலும் தமிழாய்வு வளர்ச்சி பெற்றதின் விளைவாகத் தமிழ் பற்றி ஆய்வு செய்யும் சர்வதேச அறிஞர்கள் பலரும் தமிழை ஒரு செவ்வியல் மொழியாகவே ஏற்றுப் போற்றத் தொடங்கியுள்ளனர். 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட சங்க இலக்கியங்களின் சிறப்பைப் பேசும் செக்நாட்டுத்

தமிழ் அறிஞரான டாக்டர் கமில் சுலபில் (Kamil Zvelebil) அவர்கள் சங்க இலக்கியத்தில் இடம் பெறும் 26,350 வரிகளும் உலகின் மிகப்பெரிய செவ்வியல் மொழிகளுள் தமிழும் ஒன்று என்பதை நிலைநாட்டுவதற்குப் போதுமான சான்று என்று குறிப்பிட்டுள்ளார். இந்திய மொழிகளைப் பேசும் மக்களின் பண்பாடுகளுக்குள் தமிழ்ப்பண்பாடு ஒன்றே தனித்தன்மை வாய்ந்தது என்றும் இத்தகைய உயர்பண்பாடு தமிழர்களின் இலக்கியக் கோட்பாடுகளிலும் யாப்பு விதிகளிலும் வெளிப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். சங்க இலக்கியங்கள் சமஸ்கிருத செவ்வியல் இலக்கியங்களுக்கு சம காலத்தில் தோன்றிய போதிலும் அவற்றில் சமஸ்கிருத இலக்கியத்தாக்கம் மிகக் குறைவாகவே உள்ளது என்று அவர் குறிப்பிட்டுள்ளார். தமிழின் செவ்வியல் தன்மை பற்றிப் பேசும் பேராசிரியர் ஏ.கே.இராமானுஜம் அவர்கள் இந்திய மொழிகள் அனைத்தின் கலைச்சொற்களும் சமஸ்கிருதக் கலைச்சொற்களாக அமைய, தமிழ்மொழியில் மட்டும் தமிழ்ச் சொற்கள் கலைச்சொற்களாகப் பயன்படுவதாக எழுதிச் சென்றுள்ளார். ஆக்ஸ்போர்டு ஆங்கிலத்துணைவன் (Oxford Companion to English Language) என்ற நூல் தமிழின் தனித்தன்மையைக் குறிப்பிடும்போது இலக்கிய மரபுகள், தொன்மை ஆகியவற்றைப் பொறுத்தவரையில் திராவிட மொழிகள் சமஸ்கிருதத்தோடு ஒப்பிடும் தன்மையினை உடையன என்று பேசிச் செல்கின்றது.

இந்திய மொழிகளுள் செவ்வியல் மொழியாகவும் தற்கால மொழியாகவும் செயல்படும் ஒரே மொழி தமிழ் என்பது குறிப்பிடத்தக்கது. தொன்மை நிலையில் பழைய சமஸ்கிருத இலக்கியங்களோடு ஏராளமான பொதுமைப் பண்புகளைப் பெற்றுத் திகழ்ந்த போதிலும் தமிழ்மொழி அல்லது தமிழ்இலக்கியம் இன்றும் வளர்ந்து கொண்டிருக்கும் தற்கால இலக்கிய வரிசையிலும் தொடர்ந்து வருகின்றது. பேராசிரியர் ஏ.கே.இராமானுஜம் அவர்கள் குறிப்பிடுவது போன்று இந்திய நாட்டின் இரு செம்மொழிகளுள் தமிழும் ஒன்று. அதே சமயம் தொல்பழங்காலம் முதல் தொடர்ந்து வருகின்ற ஒரே தற்கால

இந்திய மொழியும் தமிழ்மொழியாகத்தான் அமைகின்றது. செக் நாட்டுத் தமிழ் அறிஞரான டாக்டர் கமில் சுவலெபில் தமிழ் மொழியின் செவ்வியல் நிலை குறித்துக் கீழ்க்கண்ட மூன்று காரணங்களைக் குறிப்பிட்டுள்ளார். அவரைப் பொறுத்தவரையில் தமிழ் மொழியின் திறனாய்வாளர்கள், அறிஞர்கள், வரலாற்று ஆசிரியர்கள் ஆகிய அனைவரும் உலகின் ஏனைய செவ்வியல் இலக்கியங்களைப் போன்று சங்க இலக்கியங்களையும் செவ்வியல் இலக்கியம் என்றே கருதுகின்றனர். அதோடு, சங்க இலக்கியங்கள் குறிப்பிட்ட காலகட்டத்தோடு வளர்ச்சி நிலையில் நின்றுவிட்ட இலக்கியங்களாகவும் (Frozen Corpus) மேலும் வளர்ந்துகொண்டு செல்லாத படைப்புகளாகவும் அமைந்துள்ளன. சங்க காலம் முதல் இன்று வரை அது ஒரு செவ்வியல் மரபின் பகுதியாக அமைந்துள்ளது. மேலும் இப்படைப்புகள் உணர்த்தும் முறையிலும் யாப்பு நிலையிலும் மொழிநடையிலும் முழுமை பெற்றவையாக அமைகின்றன. ஒரு பெரிய கலாச்சாரத்தின் ஆற்றல் மிக்க வெளியீடாக இவை அமைந்துள்ளன. எனவே எல்லா நிலைகளிலும் சங்கப் படைப்புகள் செவ்வியல் படைப்புகளாகவே அமைந்துள்ளன.

தொல்பழங்காலம் முதல் தமிழ் மொழி வற்றாத ஜீவநதி போன்று தொடர்ந்து பெருக்கெடுத்துப் பாய்ந்து வருகின்றது. இவ்வாறு பாய்ந்து வருகின்ற இந்த பேராற்றில் பிறமொழிகளில் பல தரக்குறைவுகள் இணைந்து கொண்டபோதிலும் திராவிட மொழிக் குடும்பத்தின் வற்றாத வளம் கொழிக்கும் ஆறாக இது இன்றும் பெருகி ஓடுகின்றது. உலகின் பிற மொழிக் குடும்பங்களோடு இம்மொழி பல ஒற்றுமைக் கூறுகளைப் பகிர்ந்து கொண்டுள்ளது. 25க்கும் மேற்பட்ட மொழிகளை உள்ளடக்கிய திராவிட மொழிக் குடும்பத்தின் தலைமை மொழியாக இது அமைகின்றது. இதைச் சார்ந்துள்ள திராவிட மொழிக் குடும்பத்தில் பிராகுயி மால்டோ போன்ற மொழிகள் வட இந்தியப் பகுதிகளிலும் பலுச்சிஸ்தான் போன்ற பகுதிகளிலும் பேசப்படுவது குறிப்பிடத்தக்கது.

தொன்மை வரையறுக்கப்பட்ட இலக்கியப் கோட்பாடுகள், தற்சாராத் தன்மை ஆகியவற்றோடு பல்வேறு செவ்விலக்கியக் கூறுகள் அனைத்தையும் பழந்தமிழ் இலக்கியங்கள் பெற்றுத் திகழ்கின்றன. ஒரு பெரிய கலாச்சாரம், மொழி, பண்பாடு ஆகியவற்றின் பிரதிநிதியாக இம்மொழி காட்சியளிக்கின்றது. இம்மொழியின் வேர்களையும், விழுதுகளையும் உலகின் பிற செவ்வியல் மொழிகளில் எல்லாம் நாம் கண்டு கொள்ள முடிகின்றது. மனிதப் பொதுமைப் பண்பினை (General human nature) விளக்கி உரைக்கும் கதை மாந்தர்களைக் கொண்ட உயர் தனிப்படைப்புகளை இம்மொழியில் ஏராளம் காண்கிறோம். கால, இட, சமய, எல்லைகளைக் கடந்து மனித குலம் முழுவதற்கும் உரிய சிந்தனைகளை அள்ளி வழங்கும் ஏராளமான இலக்கிய இலக்கணக்கூறுகள் இம்மொழியில் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தோன்றியுள்ளது. இதன் செவ்வியல் தன்மைக்குச் சிறந்த சான்றாக அமைந்துள்ளது. இம்மொழி இந்திய மொழிகளில் எல்லாம் ஆழமாகத் தன் வேர்களையும், விழுதுகளையும் பரப்பியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

பல்வேறு உயர்தனிச்சிறப்புகளை உலக அரங்கில் பெற்று சர்வதேச அறிஞர்களால் உலகின் உயர்தனிச் செவ்வியல் மொழிகளில் ஒன்று என்று உறுதியாக விளக்கியுரைக்கப்பட்ட போதிலும் பழமையும் தனித்தன்மையும் வாய்ந்த இந்த மொழி அது பேசப்படும் நாட்டில் தற்கால மொழிகளின் வரிசையில் இணைக்கப்பட்டிருப்பது வருந்துவதற்குரியது. 1500க்கும் மேற்பட்ட மொழிகள் பேசப்படும் இந்திய நாட்டின் இரு தொன்மை மொழிகளாக சமஸ்கிருதமும் தமிழும் மட்டுமே திகழ்கின்றன. எனினும் சமஸ்கிருதத்திற்குச் செவ்வியல் மொழி என்னும் தகுதி தரப்பட்ட இந்த நாட்டில் தமிழ் மொழியினைத் தற்கால இந்திய மொழியின் வரிசையில் மட்டுமே அமர வைத்திருப்பது முறையானது அன்று. இந்திய நாட்டின் பல்வேறு வகைப்பட்ட பண்பாட்டுக் கூறுகளையும், பெருமை மிக்க அதன் பாரம்பரியங்களையும் மதிப்பதும், பாதுகாப்பதும் ஒவ்வொரு இந்தியனின் அடிப்படைக் கடமையாக அமைய வேண்டுமென்று

இந்திய அரசியல் சட்டம் குறிப்பிடுகின்றது. இந்தப் பின்னணியில் இந்தியக் கலாச்சாரத்திற்கு ஏராளமான பண்பாட்டுப் பங்களிப்புகளை நல்கியுள்ள தமிழ் மொழிக்குத் தரப்பட வேண்டிய முறையான அங்கீகாரம் இன்னமும் தரப்படாமல் இருப்பது வருந்துவதற்குரியது.

செனேகல் நாட்டின் தாக்கர் (Takar University) பல்கலைக்கழகம் தமிழ், அரபி, பார்சி, சமஸ்கிருதம் ஆகிய மொழிகளைச் செவ்வியல் மொழிகளாகவே ஏற்றுக்கொண்டு கற்றுத்தருகின்றது. ஆனால் நமது பல்கலைக்கழகங்கள் தமிழைப் புறக்கணித்து விட்டு அரபி, பார்சி, சமஸ்கிருதம் ஆகிய மூன்று மொழிகளை மட்டுமே செவ்வியல் மொழிகள் என்று ஏற்றுக் கொண்டுள்ளன. நூறு ஆண்டுகளுக்கு முன்னர், பரிதிமாற் கலைஞர் எனப்பெயர் கொண்ட வி.கே.சூரியநாராயண சாஸ்திரியார் என்னும் தமிழ்ப் பேரறிஞர் தமிழ் மொழிக்குச் செவ்வியல் மொழி என்னும் தகுதி தரப்பட வேண்டுமென்று அறைகூவல் விடுத்தார். அவரது நேர்மையான குரல் தமிழர்களின் நெஞ்சங்களில் மீண்டும் மீண்டும் ஒலித்துக்கொண்டே இருந்தது. நீறு பூத்த நெருப்பாக இருந்த இந்த உணர்வு தமிழகத்தில் வாழும் தமிழர்களின் நெஞ்சில் மட்டுமின்றி உலகம் முழுவதும் பரந்து கிடக்கும் தமிழ் அறிஞர்கள் தமிழ் ஆர்வலர்கள் ஆகிய அனைவரின் உள்ளங்களிலும் கனன்று, எரிந்து, கொழுந்துவிட்டுப் பரவிப் பிரகாசிக்கத் தொடங்கியுள்ளது.

ஒவ்வொரு பழமை வாய்ந்த மொழிக் குழுவினர்களும் தமது மொழி வரலாற்றின் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தைச் செவ்வியல் காலம் என்று குறிப்பிடுகின்றனர். கி.மு.500 முதல் 323 வரையுள்ள காலத்தை கிரேக்கத்தின் செவ்வியல் காலம் என்று கருதுகின்றனர். அவ்வாறே கி.மு.500 முதல் கி.பி.1110 வரையுள்ள காலகட்டம் சமஸ்கிருத மொழியின் செவ்வியல் காலமாகச் சுட்டப்படுகின்றது.

தமிழைப் பொறுத்தவரையில் சங்ககாலம் தொடங்கி கி.பி.6ஆம் நூற்றாண்டு வரையுள்ள காலகட்டத்தைச் செவ்வியல்

காலம் என்று குறிப்பிடுவது மிகவும் பொருந்தும். இக்காலக் கட்டத்தில் தமிழ்மொழி தனித்தன்மை வாய்ந்த இலக்கியங்கள் பலவற்றைப் படைத்துள்ளது. தனித்தன்மை வாய்ந்த அரியபல சாதனைகளை மொழி வளர்ச்சியில் நிகழ்த்திக் காட்டியுள்ளது. இத்தகைய கலை இலக்கியப் பங்களிப்பு இந்தியப் பண்பாட்டிற்கு திராவிடப் பண்பாடு நல்கியுள்ள மாபெரும் பங்களிப்பாக உள்ளது. திராவிடப் பண்பாடு என்பது பல்வேறு பண்பாடுகளின் சங்கமமாகத் திகழும் இந்தியப் பண்பாட்டின் மாபெரும் பகுதி என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. இந்தியவியல் ஆய்வில் ஈடுபட்டுள்ள அறிஞர்கள் அனைவரும் திராவிடப்பண்பாட்டின் சாதனைகளை மறந்துவிட்டு, அல்லது மறுத்துவிட்டு அல்லது புறக்கணித்துவிட்டு இந்தியப் பண்பாடு பற்றிய ஆய்வை முழுமையாக மேற்கொள்ள முடியாது என்பதை வலியுறுத்தியுள்ளனர். சர்வதேச நிலையில் இந்தியவியல் பற்றி ஆராயும் பிறநாட்டு அறிஞர்கள் அனைவரும் தமிழை உலகின் செவ்வியல் மொழிகளுள் ஒன்றாகக் கருதுகின்றனர். தமிழ்நாட்டின் அனைத்துப் பல்கலைக்கழகங்களும் சமஸ்கிருதம், அரபி, பார்சி ஆகிய மொழிகளோடு பழந்தமிழையும் செவ்வியல் மொழிகளின் வரிசையில் இணைத்துக் கொள்ள முன் வந்துள்ளன. செனேகல் நாட்டின் தாக்கர் பல்கலைக்கழகம் ஏற்கனவே செவ்வியல் மொழி வரிசையில் தமிழை இணைத்துக் கொண்டுள்ளது. இந்நிலையில் கி.பி.6ஆம் நூற்றாண்டு வரையுள்ள தமிழை மைய அரசு செவ்வியல் மொழி வரிசையில் இணைத்துக் கொண்டு தென்னகத்தில் செவ்வியல் மொழியான தமிழ் பற்றித் தேசிய நிலையிலும் சர்வதேச நிலையிலும் ஆராய்ச்சிகள் பெருகத் துணை நிற்கவேண்டும். என்ற நமது கோரிக்கை முறையான நேர்மையான கோரிக்கை என்பதை யாரும் மறுக்க முடியாது.

(நன்றி : உலகத் தமிழ்மொழி அறக்கட்டளை International Tamil language foundation USA. தமிழ்ப் பண்பாட்டுக் கையேடு என்னும் நுலிலிருந்து எடுத்து வெளியிடப்படுகிறது.)

தமிழும் மலையாளமும்

எஸ்.வையாபுரிப்பிள்ளை
(திருவிதாங்கூர் ஸர்வகலாசாலைத் தமிழாராய்ச்சித்துறையில் முன்னால் பேராசிரியர்)

அநாதித்தொடர்பு

சேரநாடு வெகுகாலமாகச் சோழபாண்டியரது ஆட்சியில் அடங்கியிருந்தமை சரித்திரச்சான்றுகளாலும், கல்வெட்டுக் களாலும் எளிதில் அறியலாம். இந்த ஆக்கிரமணம் எப்போது தொடங்கியது என்று வரையறை செய்யமுடியாது. சங்ககாலத்தில், தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் சேரனுள்பட எழுவரை வென்ற செய்தி கூறப்படுகிறது. (அகம் 36). இவ்வரசனே யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரலிரும்பொறை என்ற சேரனைவென்று சிறையில் அடைத்து வைத்தான் என்பதும் தெரியவருகிறது. (புறம் 7), சோழர்கள், வெண்ணி, கழுமலம், கருவூர் முதலிய இடங்களில் நிகழ்ந்த போர்களில் சேரர்களை வெற்றிகொண்ட செய்தி சங்கப் பாடல்களால் விளங்குகிறது. ஆகவே சேரர்க்கும் சோழ பாண்டியர்க்கும் போர்வினைகள் சங்ககாலந் தொட்டே நிகழ்ந்து வந்திருக்கின்றன என்று தோன்றுகிறது. சேரர்குடும்பத்திற்கும் ஏனைய சோழ பாண்டிய குடும்பங்களுக்கும் மணவினைகள் நிகழ்ந்த செய்தியும் சங்ககாலந்தொட்டு அறியப்படுகின்றது. இதுபற்றிப் பதிற்றுப்பத்தில் பல குறிப்புகள் காணலாம். இவ்வாறு பல நூற்றாண்டுகளாக, சேரர்களும் ஏனைத் தமிழரசர்களும் ஒருவர்க்கொருவர் கொண்டும் கொடுத்தும் அடுத்தும் ஊடாடிய செய்திகள் நிகழ்ந்துவந்திருக்கின்றன. சோழ பாண்டியர்களை ஒத்து விளங்கிய பழைய தமிழ்க்குடியினர் இச்சேரர்கள் என்பது மேற்கூறியவற்றாலும் நன்கு விளங்கும். இவர்கள் பேசிவந்ததும் போற்றிவந்ததும் தாய்மொழியாகிய தமிழே.

மலையாளம் உபபாஷை

இத்தமிழ் திரிந்து மலையாளமாய்ப் பரிணமிக்கத் தொடங்கியது கி.பி.10ம் நூற்றாண்டிலாகும். இக்காலத்திற்குமுன் பல நூற்றாண்டுகளாகச் செழித்து வளர்ந்த தமிழின் ஓர் உபபாஷையே மலையாளமாம். 10ம் நூற்றாண்டிற்குமுன் இத்திரிபு காணப் படவில்லை. மலையாளமொழியும் இல்லை. மூலத்திராவிடம் என்ற மலை வீழருவியினின்றும் தோன்றி, காலக்கிரமத்தில் நீர் ஏராளமாக நிறைந்து பெருக்கெடுத்துப் பாய்ந்து வந்த பேராறு தமிழாகும்.

பிரதேசநிலைமையால் இப்பேராற்றினின்று பிரிந்துபாயும் கிளை நதியே மலையாளமாம்.

ஆராய்ச்சியாளர் துணிவு

நான் இங்கே துணிந்த முடிபுகள் தமிழ் - மலையாளத் தொடர்பு பற்றி ஆராய்ந்த அறிஞர்களில் பெரும்பாலார்க்கு உடம்பாடேயாகும். மலையாள மொழியாராய்ச்சியில் தலைசிறந்து விளங்கியவர்கள் புரொபஸர். ஏ.ஆர்.ராஜராஜவர்மா. இவர்கள் தங்களது கேரள பாணினீயத்தின் பீடிகையில் இம்மொழித் தொடர்பினை விரிவாக ஆராய்ந்துள்ளார்கள். அதில் வரும் சில கருத்துக்களை இங்கே நோக்குவோம்.

1. மலநாடாய மலயாளத்திலே ஆதிநிவாசிகள் தமிழரும், அவருடெ பாஷ தமிழுமாயிருந்து. (பக்.5)

2. மலயாளம் தமிழின்றெ ஒரு உபபாஷ (பக்.13)

3. கொல்லவர்ஷ ஆரம்பகட்டமாய் கிறிஸ்துவப்தம் 825 மேலே மலயாளம் ஒரு ஸ்வதந்தர பாஷயுடெ நிலயில் எத்தியுள்ளு அதினெ கொல்லவருஷாரம்பத்திநு முன்புள்ள காலத்தெ மாதாவாய தமிழின்றே கர்ப்பத்தில் வஸிச்சிருந்த காலமாயி கணிச்சால்மதியாவும். (பக்.54)

4. பாலிகயாய கேரளபாஷயுடெ ரக்ஷகர்த்ரு ஸ்தானம் தமிழிநுதந்நே ஆயிருந்து. (பக்.55)

5. சோழம், கேரளம், பாண்ட்யம் ஈ முந்நு தேசங்ஙளிலேயும் பாஷ தமிழின்றெ வகபேதங்ஙளாண. (பக்.66)

இவைகளெல்லாம் நான் கூறியவந்த முடிபுகளும் அவற்றினின்றும் பெறப்படுவனவுமே யாகும். இப்பேராசிரியர் கருத்துக்கும் எனது கருத்துக்கும் இரண்டு வேறுபாடுகள் உண்டு. ஒன்று காலம் பற்றியது. கி.பி.825ல் அதாவது கொல்லம் ஆண்டின் தொடக்கத்தில்தான் மலையாளமொழியின் ஆரம்பம் என்பவர் இவர். எனது கருத்தின்படி ஒரு நூற்றாண்டிற்குப்பின் அதாவது 10ஆம் நூற்றாண்டிற்குப்பின் இவ்வாரம்பம் நிகழ்ந்ததாம். இதற்கு முக்கியகாரணம் 9ம் நூற்றாண்டினரும் கொடுங்கோளூரில் அரசு புரிந்த வருமான சேரமான் பெருமாள்நாயனார் தமிழிலேயே பாடியுள்ளார் என்பதே. இவர்காலத்தில் தமிழ்தான் மலையாள தேசத்தில் வழங்கிவந்தது. எனவே இவர்காலத்திற்குப்பின் 10ம் நூற்றாண்டளவிலே மலையாளமொழியின் தொடக்கத்தைக் கூறுதல்வேண்டும். கொல்லம் ஆண்டின் ஆரம்பத்திற்கும் மலையாளமொழியின் ஆரம்பத்திற்கும் யாதொரு தொடர்பும் கிடையாது. ராஜராஜவர்மா அவர்கள் குறித்த காலம் உத்தேசமேயன்றி வேறல்ல.

தொடரும்

பதிப்பாசிரியர்.

பேராசிரியர். இரா. சதாசிவம்

ஆசிரியர் குழு

பேரறிஞர். நா. பாலுசாமி

பேரறிஞர். தமிழண்ணல்

பேரறிஞர். செ. கந்தசாமி

டாக்டர். ந. சேதுராமன்

பேரறிஞர். ம.ரா.போ. குருசாமி

பேரறிஞர். கதிர். மகாதேவன்

பேரறிஞர். அ.அ. மணவாளன்

பெரும் புலவர். இரா. இளங்குமரன்

பேரறிஞர். அ. தட்சிணாமூர்த்தி

பேரறிஞர். இ.கி. இராமசாமி

திரு. சே. அரிராமநாதன்

திரு. வே. திருவரங்கராசன்

திரு. ந. வாசுகிராசா

பதிப்பாசிரியர், இரா.சதாசிவம், 2/404, மருதுபாண்டியர் தெரு, மதுரை-20. © 2532879

அன்பு அச்சகம், மதுரை-1. © 2341116